தமிழ்நாடு அரசு

# புத்தாக்கப் பயிற்சிக் கட்டகம்

## 2021-2022

## 12

# பொதுத் தமிழ்

பள்ளிக் கல்வித்துறை

| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | அ) பகுபத உறுப்புகள் | 1 |
| 2 | ஆ) பகுபத உறுப்புகள் | 3 |
| 3 | இலக்கணக்குறிப்பு | 5 |
| 4 | புணர்ச்சி விதிகள் | 8 |
| 5 | திணை | 11 |
| 6 | துறை | 14 |
| 7 | அணி இலக்கணம் | 17 |
| 8 | இலக்கிய நயம் பாராட்டுக – 1 | 20 |
| 9 | இலக்கிய நயம் பாராட்டுக – 2 | 22 |
| 10 | வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக | 25 |
| 11 | மயங்கொலிச் சொற்களைத் தொடராக்குதல் | 28 |
| 12 | பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துதல் | 31 |
| 13 | தொடரில் காணப்படும் பிழைகளை நீக்குதல் | 33 |
| 14 | மரபுப்பிழை நீக்கம் | 35 |
| 15 | உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்தல் | 38 |
| 16 | பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல் | 41 |
| 17 | பழமொழி– வாழ்க்கை நிகழ்வு | 43 |
| 18 | கலைச்சொல்லாக்கம் | 45 |
| 19 | கருத்துப் படத்தைப் பத்தியாக்குக /சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் எழுதுதல். | 48 |
| 20 | பத்தி கொடுத்து வினா அமைத்தல் / கடித இலக்கியம் | 50 |
| 21 | தமிழாக்கம் | 53 |
| 22 | பா இயற்றப் பழகலாம் | 55 |
| 23 | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் அறிதல் | 57 |
| 24 | வேற்றுமை | 59 |
| 25 | எட்டுத்தொகை நூல்கள் | 62 |
| 26 | திருக்குறள் | 64 |
| 27 | காப்பியங்கள் | 66 |
| 28 | சிறுகதை | 68 |
| 29 | கட்டுரைக்கான நெறிமுறைகள் | 70 |
| 30 | நேர்காணல் உத்திகள் | 73 |




12th_General Tamil_RCM_TM.indd 3 14-08-2021 12:17:13

# 1 அ. பகுபத உறுப்புகள்

## கற்றல் விளைவுகள்

- பதம் பற்றியும் அவற்றின் வகைகளைப் பற்றியும் அறியச் செய்தல்.
- பகுபதத்தின் உறுப்புகள் (6) பற்றி விளக்கமாக அறிந்து கொள்ளுதல்.
- சொற்களைப் பொருள் புரிந்து காலத்திற்கேற்பப் பயன்படுத்தும் திறன் பெறுதல்

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல்**

மாணவர்களே ! நாம் மனித உடல் உறுப்புக்களான கண், காது, மூக்கு, கை, கால் எனப் பகுதி பகுதியாகப் பிரிப்போம். அதே போல் தமிழில் உள்ள சொற்களையும் பொருள் தன்மையிலும் உறுப்புகள் தன்மையிலும் பிரிக்கலாம் என்று கூறி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு: 1**

பதம் என்பதன் வரையறை:

ஓர் எழுத்துத் தனித்தோ (அ) ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்தோ பொருளைத் தந்தால் அது பதம் எனப்படும். பதம் – பகுபதம், பகாபதம் என இரண்டு வகைப்படும்.

"எழுத்து தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்
அது பகாப்பதம், பகுபதம் என இருபாலாகி இயலும் "

என்ப.(நன்னூல் –128)

பதம் = சொல், கிளவி, மொழி என்பர்

பகுத்தல் = பங்கிடுதல், கூறிடுதல், பிரித்தல் என பொருள் கூறலாம்.

| பதம் ( 2 ) | |
|---|---|
| பகுபதம் (பிரிக்க முடியும் சொற்கள் ) (பிரித்தால் பொருள் தரும் ) | பகாப்பதம் (பிரித்தால் பொருள் தராத சொற்கள்) |
| சான்று : கொள்வார் = கொள் + வ் + ஆர் | சான்று : கண், சால, பிற |

**குறிப்பு :**

பெயர்ப்பகுபதச் சொற்களைக் காட்டிலும் வினைப் பகுபதச் சொற்களே வழக்கில் மிகுதி.

**செயல்பாடு: 2**

பகுபத உறுப்புகள் – ஆறு. அவையாவன பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்.

### 1. பகுதி: (முதனிலை)

- ஒரு சொல்லின் முதலில் வரும் அடிச்சொல்லே பகுதி ஆகும். இதனை வேர்ச்சொல் என்றும் அழைப்பர்.
- விகுதி பெறாத கட்டளை (அ) ஏவல் வினையே பகுதி.



12th_General Tamil_RCM_TM.indd 1 14-08-2021 12:17:13

**சான்று :**

- நடந்தான் = நட, ஓடினான் = ஓடு, படித்தான் = படி. இதில் நட, ஓடு, படி என்பன பகுதி.
- பெற்றேன் = பெறு (பெற்று இறந்த காலம் காட்டியது.) + ஏன்
  பகுதி ஒற்று இரட்டித்துக் காலம் காட்டும்.

**2. விகுதி: (கடைநிலை)**

- சொல்லின் இறுதியில் வரும்.
- திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும்.

**சான்று :**

படித்தான் = படி + த் + த் + ஆன் ( ஆன் – உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை ஆகியவற்றைக் காட்டி நிற்கிறது)

| | | |
|---|---|---|
| வியங்கோள் வினைமுற்று விகுதி | = | க, இய, இயர் (எழுதுக = எழுது + க) |
| தொழிற்பெயர் விகுதி | = | தல் ( செய்தல் = செய் + தல் ) |
| பெயரெச்ச விகுதி | = | அ, உம் ( உரைத்த = உரை + த் + த் + அ) |
| வினையெச்ச விகுதி | = | இ, உ ( படித்து = படி + த் + த் + உ ) |

(இதேபோல் தன்மை, முன்னிலை, படர்க்கை – ஒருமை, பன்மை வினைமுற்று விகுதிகளும் வரும்.

**செயல்பாடு: 3**

**3. இடைநிலை:**

- பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.
- காலத்தைக் காட்டும்.
- வினைச் சொற்களில் பெரும்பாலும் இடைநிலை வரும்.

1. நிகழ்கால இடைநிலை – கிறு, கின்று, ஆநின்று
2. எதிர்கால இடைநிலை – ப், வ்
3. இறந்த கால இடைநிலை – த், ட், ற், இன்
4. எதிர்மறை இடைநிலை – ஆ, அல், இல்

**சான்று :**

- நடந்தான் = நட+ த்(ந்)+த்+ஆன்
- பேசான் = பேசு + (ஆ) +ஆன்

## மாணவர் செயல்பாடு

ஒரு மாணவன் கரும்பலகையில் ஒரு சொல்லை எழுத மற்ற மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து பிரித்துக்காட்டி உறுப்புகளைக் கூறச் செய்தல்.

## மதிப்பீடு

1. பதம் என்பதன் வரையறை யாது?
2. விகுதி என்றால் என்ன?



12th_General Tamil_RCM_TM.indd 2 14-08-2021 12:17:13

# 2 ஆ. பகுபத உறுப்புகள்

## கற்றல் விளைவுகள்

- பதம் பற்றியும் அவற்றின் வகைகளைப் பற்றியும் அறியச் செய்தல்.
- பகுபதத்தின் உறுப்புகள் ( 6) பற்றி விளக்கமாக அறிந்து கொள்ளுதல்.
- சொற்களைப் பொருள் புரிந்து காலத்திற்கேற்பப் பயன்படுத்தும் திறன் பெறுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

மாணவர்களே ! நாம் மனித உடல் உறுப்புக்களான கண், காது, மூக்கு, கை, கால் எனப் பகுதி பகுதியாகப் பிரிப்போம். அதே போல் தமிழில் உள்ள சொற்களையும் பொருள் தன்மையிலும் உறுப்புகள் தன்மையிலும் பிரிக்கலாம் என்று கூறி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

### 4. சாரியை

- இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

**சான்று :** பார்த்தனன் = பார் + த் + த் + அன் + அன்

- சந்தி வர வேண்டிய இடத்தில் உயிர்மெய் எழுத்து வந்தால் அதனை சாரியை என்று குறிப்பிடல் வேண்டும்.

**சான்று :**

- தருகுவென் = தா ( தரு) + கு + வ் + என்
- சாரியைக்குப் பொருள் இல்லை.

**குறிப்பு :**

- அன், அள், அர் விகுதிக்கு '**அன்**'னே சாரியை.
- ஆன், ஆள், ஆர் விகுதிக்கு '**அன்**' சாரியை வராது.

### செயல்பாடு : 2

### 5. சந்தி

- பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.
- சந்தி என்பதற்குப் புணர்ச்சி என்று பெயர்.
- சந்தியாக வரும் எழுத்துகள் – த், ப், க்
- உடம்படு மெய்களும் ( ய், வ் ) சந்தியாக வரும்.



12th_General Tamil_RCM_TM.indd 3 14-08-2021 12:17:13

**சான்று :**

- அசைத்தான் = அசை + த் + **த்** + ஆன்
- மயங்கிய = மயங்கு + **இ (ன்)** + ய் + அ

**செயல்பாடு : 3**

**6. விகாரம்**

பகுதி, விகுதி இடைநிலை ஆகியவை புணரும்போது அவற்றின் வடிவில் ஏற்படும் மாற்றம் விகாரம் ஆகும்.

**சான்று**

- நின்றான் = நில் (ன்) + ற் + ஆன் ( திரிதல் )
- வணங்கிய = வணங்கு + இ (ன்) + ய் + அ ( கெடுதல்)
- கண்டான் = காண் ( கண் ) + ட் + ஆன் ( நெடில் குறிலாகக் குறுகியது )

**எழுத்துப்பேறு :**

- பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் உறுப்பு
- காலம் காட்டாது
- எழுத்துப்பேறாக வரும் எழுத்து = த்

**சான்று :**

- பாடுதி = பாடு ( பகுதி ) + த் (எழுத்துப்பேறு) + இ (முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி)
- மொழியாதான் = மொழி+ய்+ஆ (எதிர்மறை இடைநிலை)+த் (எழுத்துப்பேறு) + ஆன்

## மாணவர் செயல்பாடு

ஒரு மாணவன் கரும்பலகையில் ஒரு சொல்லை எழுத மற்ற மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து பிரித்துக்காட்டி உறுப்புகளைக் கூறச் செய்தல்.

## மதிப்பீடு

1. காண்பித்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

2. எழுத்துப்பேறு வரையறு.

3. பகுபத உறுப்புகள் எத்தனை ? அவை யாவை ?



12th_General Tamil_RCM_TM.indd 4 14-08-2021 12:17:13

# 3 இலக்கணக்குறிப்பு

## கற்றல் விளைவுகள்

- செய்யுளில் உள்ள இலக்கண வகைச் சொற்களைக் கண்டறிந்து அவற்றைப் புரிந்துகொள்வதில் பேரார்வத்தை ஏற்படுத்துதல்.
- திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் கொண்டும் இலக்கணக்குறிப்புகளைக் கண்டறியச் செய்தல்.

## ஆசிரியர் செயல்பாடு


### ஆர்வமூட்டல்

மாணவர்களே! இந்தக் கடித உறையில் நான் தபால் வில்லை (stamp) ஒட்டியுள்ளேன். இதில் ஒட்டிய பசை எங்கே? என்று வினவி இது போன்று தமிழ்ச் சொற்களிலும் உருபுகள் மறைந்து வரும் என்று கூறி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு: 1**

ஒரு வேர்ச்சொல்லைக் கொண்டு பல்வேறு சொற்களை உருவாக்கி அதற்கான இலக்கணக் குறிப்புகளை அறிதல்..




(இது போன்று அறி, நட, ஓடு எனப் பல வேர்ச்சொல்லைக் கொண்டு இலக்கணக் குறிப்புச் சொற்களை உருவாக்குதல்).



12th_General Tamil_RCM_TM.indd 5 14-08-2021 12:17:14

தொகை = மறைந்து வருவது

**பண்புத்தொகை:**

- குணம், நிறம்,சுவை, வடிவம் (அளவு) என்ற நான்கு பண்புகளுள் ஒன்றைப் பெற்று வரும். இரண்டு சொற்களாக வரும்.
- முதலில் பண்புச்சொல்லும், அடுத்துப் பெயர்ச்சொல்லும் அமைந்து, இரண்டும் இணைந்து வரும்.
- இரண்டு சொற்களுக்கிடையில் 'ஆகிய', 'ஆன' என்னும் சொற்களுள் ஒன்று மறைந்து வரும்.
- பண்புத்தொகைச் சொற்களைப் பிரிக்கும் போது பெரும்பாலும் நிலைமொழி ஈறு 'மை' விகுதியைப் பெறும்.

**சான்று**

செந்தமிழ் = செம்மை+ தமிழ் (பண்பு + பெயர்)

செம்பரிதி = செம்மை+ பரிதி

**இருபெயரொட்டுப் பண்புத்தொகை:**

- இரண்டு பெயர்ச்சொற்கள் ஒட்டி (சேர்ந்து) வரும்.
- முதல் சொல் சிறப்புப் பெயராகவும் இரண்டாம் சொல் பொதுப் பெயராகவும் அமையும்.

**சான்று**

வாழை + பழம் = வாழைப்பழம்

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

**செயல்பாடு: 2**

**வினைத்தொகை**

- இரு சொற்கள் இணைந்து வரும்
- முதற்சொல் வினைச் சொல்லாகவும் (வினைஅடி / வினை வேர்), இரண்டாம் சொல் பெயர்ச் சொல்லாகவும் அமையும்.
- இரு சொற்களுக்கு இடையில் காலம் காட்டும் இடைநிலைகள் மறைந்து வரும். முக்காலத்தையும் உணர்த்தும்.
- காலம் கரந்த பெயரெச்சமே வினைத்தொகை.

**சான்று**

1. அலைகடல் 2. திருந்துமொழி

**செயல்பாடு: 3**

**உவமைத்தொகை**

- இரண்டு சொற்கள் இணைந்து வரும்.
- முதற்சொல் உவமைச் சொல்லாய் வரும்.
- இரண்டாம் சொல் பொருளை (உவமேயம்) உணர்த்த வரும்.
- இரு சொற்களுக்கு இடையில் போன்ற, போல என்னும் உவம உருபு மறைந்து வரும்.

**சான்று**

முத்து + பல் = முத்துப்பல்

செயல்பாடு: 4

**உம்மைத்தொகை**

- ✍ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் சேர்ந்து வரும்.
- ✍ சொற்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாய் இருக்கும்.
- ✍ ஒவ்வொரு சொல்லுக்கும் இறுதியில் 'உம்' என்ற இடைச்சொல் மறைந்து வரும்.

**சான்று**

1. இரவு / பகல் 2. தாய் / தந்தை 3. மா/ பலா/ வாழை

**எண்ணும்மை**

- ✍ ஒன்றுக்கொன்று தொடர்புடைய சொற்கள் சேர்ந்து வரும்.
- ✍ 'உம்' என்ற இடைச்சொல் வெளிப்படையாக வரும்.

**சான்று**

1. தேமாவும் புளிமாவும் 2. ஆடலும் பாடலும் 3. வையகமும் வானகமும்

(இதேபோல் பிற இலக்கணக்குறிப்புகளை மாணவர்களுக்கு விளக்கவும்.)

## மாணவர் செயல்பாடு

### தனி மாணவர் செயல்பாடு

ஆசிரியர், கரும்பலகையில் பல்வேறு சொற்களை எழுதி, ஒவ்வொரு மாணவராக அழைத்து அச்சொல்லுக்குரிய இலக்கணக் குறிப்புகளை எழுதச் செய்தல்.

### குழுச் செயல்பாடு

மாணவர்களைப் பல்வேறு குழுக்களாகப் பிரித்தல். பாடநூலில் உள்ள செய்யுள் பகுதியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதிலமைந்துள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்புகளைக் காணச் செய்தல்.

## மதிப்பீடு

1. பொதிகை மலை – இலக்கணக் குறிப்பு தருக.

2. எண்ணும்மை என்றால் என்ன?

3. திருந்துமொழி – இலக்கணக் குறிப்பு தருக.



12th_General Tamil_RCM_TM.indd 7 14-08-2021 12:17:14

# 4 புணர்ச்சி விதிகள்

## கற்றல் விளைவுகள்

- புணர்ச்சி இலக்கண அடிப்படைகளை அறிந்து பயன்படுத்துதல்
- மொழியைப் பிழையின்றிக் கையாளவும் பாடலடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் பிரித்தறியவும் மொழி ஆளுமையைப் புரிந்து கொள்ளவும் திறன் பெறுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

நாம் பயணம் செய்யும் தொடர்வண்டியில் என்ஜினையும், பெட்டியையும் சேர்த்துப் பயணம் செய்வது போல நிலைமொழியும் வருமொழியும் சேர்வது தான் புணர்ச்சி என்று கூறி ஆர்வமூட்டல்.

கீழ் வகுப்பில் நீங்கள் படித்த சேர்த்தெழுதுக, பிரித்தெழுதுக, என்பதுதான் நிலைமொழி, வருமொழி எனக்கூறிச் சேர்த்தும் பிரித்தும் காண்பித்து ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

நிலைமொழியும் வருமொழியும் இணைவதைப் புணர்ச்சி என்கிறோம். நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் புணர்ச்சிக்குரியனவாகும்.

**சான்று**

நிலைமொழி — உயிரீறு / மெய்யீறு

மணி (ண் +இ ) + மாலை (உயிரீற்றுப் புணர்ச்சி )

பொன் + வண்டு (மெய்யீற்றுப் புணர்ச்சி )

வருமொழி — உயிர் முதல் / மெய்ம்முதல்

வாழை + இலை ( உயிர்முதல்)

தமிழ் + நிலம் (ந் + இ) மெய்ம்முதல்



12th_General Tamil_RCM_TM.indd 8 14-08-2021 12:17:14

### செயல்பாடு: 2

**உயிரீற்றுப் புணர்ச்சி**

நிலைமொழி ஈற்று உயிரோடு, வருமொழி முதல் உயிர் ( உயிர் + உயிர் ) புணரும்போது அவை பொருந்தா. அவற்றைப் பொருந்தச் செய்ய இடையில் ய், வ் என்னும் மெய்களுள் ஒன்று தோன்றும். அதுவே உடம்படுமெய் ஆகும்.

> "இஈ ஐ வழி யவ்வும் ஏனை
> உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
> உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்."

இ,ஈ, ஐ = **ய்,** யகர உடம்படு மெய்யும்

அ,ஆ,உ,ஊ,எ,ஏ,ஒ,ஓ,ஔ = **வ்,** வகர உடம்படு மெய்யும்

ஏ = **ய்,வ்** இரண்டு உடம்படு மெய்யும் தோன்றும்.

**சான்று**

காட்சியழகு = காட்சி +ய் + அழகு (இகர ஈறு)
மாவிலை = மா +வ் + இலை (ஆகார ஈறு)
சேவடி = சே + வ் + அடி } (ஏகார ஈறு)
சேயிழை = சே + ய் + இழை

### செயல்பாடு: 3

**மெய்யீற்றுப் புணர்ச்சி**

நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யெழுத்தாக இருப்பின் வருமொழியின் முதல் எழுத்து உயிரெழுத்தாகவும் மெய்யெழுத்தாகவும் இருப்பதால் அவை சேரும் புணர்ச்சி மெய்யீற்றுப் புணர்ச்சி என்பர்.

**சான்று**

வாயொலி = வாய் + ஒலி

விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி,

வாய் + ஒலி = வாயொலி எனப் புணரும். (ய் + ஒ = யொ)

### செயல்பாடு: 4

**குற்றியலுகரப் புணர்ச்சி**

நிலைமொழியின் இறுதியிலுள்ள குற்றியலுகரம் ( கு சு டு து பு று ) வருமொழியின் முதலில் உள்ள உயிரெழுத்தோடு புணரும்போது, தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதிமெய் வருமொழி உயிரெழுத்தோடு புணரும்.

**சான்று:**

மாசற்றார் = மாசு + அற்றார் (ச் + உ = சு)



12th_General Tamil_RCM_TM.indd 9 14-08-2021 12:17:14

விதி 1: "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" என்னும் விதிப்படி, உகரம் கெட்டது.
மாச் + அற்றார்

விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி
மாச் + அற்றார்= மாசற்றார்

## மாணவர் செயல்பாடு

### தனி மாணவர் செயல்பாடு

ஆசிரியர் கரும்பலகையில் பல்வேறு சொற்களை எழுதி, ஒவ்வொரு மாணவரும் அவற்றைப் பிரித்தெழுதி, நிலைமொழி எது? வருமொழி எது? என்பதை அறிந்து அதற்கான விதிகளையும் எழுதச் செய்தல்.

### குழுச்செயல்பாடு

மாணவர்களை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்தல். அவர்கள் தங்களுக்குத் தெரிந்த சொற்களைக் கொண்டு பிரித்து, அவற்றிற்கு ஏற்ற விதிகளை எழுத செய்தல். ஆசிரியர் உரிய வழிகாட்டி கருத்தை முழுமை பெறச் செய்தல்

## மதிப்பீடு

1. புணர்ச்சி என்றால் என்ன?

2. உயிரீற்று, மெய்யீற்றுப் புணர்ச்சி வரையறு

3. குற்றியலுகரப் புணர்ச்சி சான்று தந்து விளக்குக.



12th_General Tamil_RCM_TM.indd 10 14-08-2021 12:17:14

# 5 திணை

## கற்றல் விளைவுகள்

- திணை என்றால் என்ன என்பதை அறிதல்.
- உச்சரிப்பு முறைகளை அறிந்து பொருள் உணர்தல்.
- வாழ்வியலில் ஒழுக்க நெறி முறைகளைப் பற்றி அறியச் செய்தல்
- அகப்பொருள், புறப்பொருள் பற்றிய திணைகளை அறிதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

மாணவர்களே ! திணை என்றதும் உங்கள் நினைவுக்கு வருவது ஒரு வகை தானியம் என்பீர்கள். ஆனால் நான் குறிப்பிடுவது 'ற' னகரத்தில் உள்ள தினைப்பற்றி அல்ல, 'ட' ணகரத்தில் உள்ள திணை பற்றிக் கூறுகிறேன் என மாணவர்களுடன் கலந்துரையாடி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

திணை என்றால் ஒழுக்கம் அல்லது இனம் என்று பொருள். உலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் திணையின் அடிப்படையில் பகுக்க முடியும்.

திணையைச் சொல் பாகுபாடு முறையில் 2 வகையாகப் பிரிக்கலாம், இதனைக் கீழ் வகுப்பில் படித்து இருப்பீர்கள். அவை உயர்திணை, அஃறிணை.

> "மக்கள் தேவர் நரகர் உயர்திணை
> மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை

(நன்னூல் – 261)

திணை பொருள் பாகுபாடு முறையில் 2 வகையாகப் பிரிக்கலாம்

- அகத்திணை (வாழ்வியல்)
- புறத்திணை (உலகியல் )

அகத்திணை ( வாழ்வியல்):

- 1. குறிஞ்சி 2. முல்லை 3. மருதம் 4. நெய்தல் 5. பாலை 6. கைக்கிளை 7. பெருந்திணை

புறத்திணை (உலகியல்):

- 1. வெட்சி 2. கரந்தை 3. வஞ்சி 4. காஞ்சி 5. நொச்சி 6. உழிஞை 7. தும்பை 8. வாகை 9. பாடாண் 10. பொதுவியல் 11. கைக்கிளை 12. பெருந்திணை


12th_General Tamil_RCM_TM.indd 11 14-08-2021 12:17:14

- ✍ தொல்காப்பியம் குறிப்பிடும் திணைகள் – 7
- ✍ புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் திணைகள் – 12
- ✍ புறநானூற்றில் பாடப்பட்டுள்ள புறத்திணைகள் – 11 (உழிஞை நீங்கலாக)

**செயல்பாடு: 2**

குறிப்பிட்ட சில திணைகளை எடுத்துக்காட்டு மூலம் விளக்குதல்.

**பொதுவியல் திணை**

திணை விளக்கம் : வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும் பிற பொதுவான செய்திகளையும் கூறுவது.

**சான்று**

"புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்"
(புறம் – கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி)

**சான்று விளக்கம்**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காக உழைப்பவர் அமிழ்தமே கிடைத்தாலும் தனித்து உண்ணாமலும், யாரையும் வெறுக்காமலும், சோம்பல் இன்றியும் அஞ்சுவதற்கு அஞ்சுவர், புகழ் வரும் எனில் உயிரையும் கொடுப்பர். உலகம் முழுவதும் கிடைத்தாலும் பழிவரும் செயல்களைச் செய்யார். எனவே தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**திணை பொருத்தம்**

பிறர் நலத்தைத் தன்னலமாகக் கருதும் பொதுவான செய்தியைக் கூறுவதால் இது பொதுவியல் திணை ஆகும்.

**செயல்பாடு: 3**

பாடாண் திணை

**திணை விளக்கம்**

ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணை.

**சான்று**

"வாயி லோயே ! வாயி லோயே !

_______________

எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே"

(புறம் – ஔவையார்)

**சான்று விளக்கம்**

வாயில் காவலனே ! புலவர்களாகிய நாங்கள் வள்ளல்களை அணுகி அறிவார்ந்த சொற்களை விதைத்துத் தான் எண்ணியதை முடிக்கும் வலிமை உடையவர்கள். அதியமான் தன் தகுதி அறியானோ? இவ்வுலகில் அறிவும் புகழும் உடையோர் மாய்ந்து விடவில்லை. தச்சனின் பிள்ளைக்குக்


12th_General Tamil_RCM_TM.indd 12 14-08-2021 12:17:14

காட்டில் ஒரு மரம் கூடவா கிடைக்காமல் போகும். கலைத் தொழில் வல்ல எங்களுக்கும் எத்திசைகளில் சென்றாலும் தவறாமல் உணவு கிட்டும்.

**திணை பொருத்தம்**

இதில் அதியமானின் அறிவார்ந்த சொற்களும், எண்ணியதை முடிக்கும் வலிமையும், வள்ளல்களின் சிறப்பை அறிந்து கொடையளிக்கும் தன்மையும் கூறப்பட்டதால் இப்பாடல் பாடாண் திணையைச் சார்ந்ததாகும்.

## மாணவர் செயல்பாடு

### தனி மாணவர் செயல்பாடு

திணை – திணை இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டினைக் கரும்பலகையில் எழுதி விளக்குதல்

### குழுச்செயல்பாடு

மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்தல்.

முதல் குழு அகத்திணைகள் பற்றியும் இரண்டாவது குழு புறத்திணைகள் பற்றியும் கேட்டறிதல். (இரு குழுக்களும் மாறி மாறி கேட்டல்)

## மதிப்பீடு

1. திணை என்றால் என்ன ? அவற்றின் வகைகள் ?

2. தொல்காப்பியம் குறிப்பிடும் புறத்திணைகள் எத்தனை ? அவை யாவை ?

3. புறநானூறு குறிப்பிடும் புறத்திணைகள் எத்தனை ? அவை யாவை ?



12th_General Tamil_RCM_TM.indd 13 14-08-2021 12:17:14

# 6 துறை

## கற்றல் விளைவுகள்

- சங்க இலக்கியத்தில் இடம் பெறும் துறைகளைப் பற்றி அறியச் செய்தல்.
- மக்களின் வாழ்வியல் நெறிகளை அறிதல்.
- புறத்திணைகளின் உட்பிரிவுகளை அறிதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல்**

மாணவர்களே! நேற்று நாம் கற்ற பாடத்தில் எதைப் பற்றி அறிந்து கொண்டீர்கள்? (திணை, திணை வகைகள்) இன்று அதன் தொடர்ச்சியாகத் திணையின் உட்பிரிவாகிய துறைப் பற்றிக் கற்றுக்கொள்ள போகிறோம் என்று கூறி மாணவர்களை ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு: 1**

துறை என்பது ஒரு சிறிய பிரிவு அல்லது பகுப்பு, திணையின் உட்பிரிவு துறை எனலாம். திணை என்பது மக்கள் ஒழுக்கம். துறை என்பது மக்களும் விலங்குகளும் சென்று நீர் உண்ணும் துறை போலப் பல வகைப்பட்ட பொருள்களும் ஒருவகை பட்டுச் செல்லுதற்குறிய வழியாகும். மக்கள் வாழ்க்கைக்குரிய நெறி என்று சுருக்கமாகக் கூறலாம். திணை ஆறு போன்றது, துறை ஆற்றில் மக்கள் இறங்கும் துறை போன்றது.

**செயல்பாடு: 2**

குறிப்பிட்ட சில துறைகளை எடுத்துக்காட்டு மூலம் விளக்குதல்.

**செவியறிவுறூஉத்துறை**

துறை விளக்கம் : அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறை தவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தல் செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.

**சான்று**

" காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே,
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்

______________________

யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான், உலகமும் கெடுமே " (புறம் – பிசிராந்தையார்)



12th_General Tamil_RCM_TM.indd 14 14-08-2021 12:17:14

**சான்று விளக்கம்**

சிறு நிலப்பரப்பில் விளைந்த நெல்லைக் கவளமாக்கிக் கொடுத்தால், யானைக்குப் பல நாள்களுக்கு உணவாகும். பெரு நிலமாயினும் யானை தானே புகுந்து உண்ணத் தொடங்கினால், யானையின் வாயுள் புகுவதைவிடக் கால்களில் பட்டு அழிவதே மிகுதியாகும். அது போல், அரசன் என்பவன் மக்களிடம் முறையறிந்து வரியை வசூலித்தால் மிகுதியான பொருளும் கிடைக்கும், நாடும் தன் வளத்தில் குறையாது பெருகும். மக்கள் மகிழ்வர்.

வரி திரட்டும் முறை அறியாது மக்களை வருத்தும் மன்னன், விளை நிலத்தில் புகுந்து தானே உண்ணும் யானைக்கு ஒப்பானவனாகி விடுவான். அதனால் குடி மக்களின் அன்பு கெடும். நிலத்தில் புகுந்த யானை தானும் உண்ணாது வீணாக்குவது போல, வரி விதிப்பின் முறை அறியாத அரசன் தானும் பயன் அடையமாட்டான், மக்களும் துன்புறுவார்கள்.

**துறை பொருத்தம்**

பாண்டியன் அறிவுடைநம்பிக்கு வரி திரட்டும் முறைகளை அவர் கேட்கும் படிக் கூறியிருப்பதால் இப்பாடல் இத்துறையுடன் பொருந்தியுள்ளது.

**செயல்பாடு: 3**

பொருண்மொழிக் காஞ்சித்துறை

**துறை விளக்கம்**

மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண் மொழிக்காஞ்சித் துறையாகும்.

**சான்று**

" புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்
பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்"

(புறம் – கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி)

**சான்று விளக்கம்**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள், தனித்து உண்ண மாட்டார்கள், பழிக்கு அஞ்சுவர் வெறுத்தல், சோம்பல் இன்றிச் செயல்படுவார்கள். புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பர், பழி வரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளாதவர். எதற்கும் மனம் தளராதவர்கள். இத்தகைய சிறப்புடையோர் இருப்பதால்தான் இவ்வுலம் இன்றுவரை இயங்கிக் கொண்டிருக்கிறது.

**துறை பொருத்தம்**

புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பர், பழி வரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளார் என்று மக்களுக்கு நன்மை செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுவதால் பொருண்மொழிக்காஞ்சித் துறைக்குப் பொருந்தி வருகிறது.

**செயல்பாடு: 4**

**பரிசல் துறை**

**துறை விளக்கம்**

புலவர் ஒருவர் அரசனிடம் பரிசு வேண்டி வாயிலில் நிற்பது பரிசல் துறையாகும்.



12th_General Tamil_RCM_TM.indd 15 14-08-2021 12:17:14

**சான்று**

" வாயிலோயே ! வாயிலோயே !

___________________

செலினும், அத்திசைச் சோறே" (புறம் – ஔவையார்)

**சான்று விளக்கம்**

வாயில் காவலனே ! புலவர்களாகிய நாங்கள் வள்ளல்களை அணுகி அறிவார்ந்த சொற்களை விதைத்துத் தான் எண்ணியதை முடிக்கும் வலிமையுடையவர்கள். அதியமான் தன் தகுதி அறியானோ? இவ்வுலகில் அறிவும் புகழும் உடையோர் மாய்ந்து விடவில்லை. தச்சனின் பிள்ளைக்குக் காட்டில் ஒரு மரம் கூடவா கிடைக்காமல் போகும். கலைத்தொழில் வல்ல எங்களுக்கும் எத்திசைகளில் சென்றாலும் தவறாமல் உணவு கிட்டும்.

**துறை பொருத்தம்**

பரிசில் கிடைக்கச் சற்றுத் தாமதமாகவே வாயிற்காவலனிடம் ஔவையார் வாதம் செய்கிறார். எனவே இப்பாடல் பரிசில் துறைக்குச் சான்றாயிற்று.

## மாணவர் செயல்பாடு

துறையைக் கரும்பலகையில் சான்றுடன் எழுதி விளக்குதல்.

## மதிப்பீடு

1. துறை என்றால் என்ன ?

2. பொருண்மொழிக்காஞ்சித் துறையைச் சான்றுடன் விளக்கிக் கூறுக.



12th_General Tamil_RCM_TM.indd 16 14-08-2021 12:17:14

# 7 அணி இலக்கணம்

## கற்றல் விளைவுகள்

- செய்யுளின் கருத்தை அழகுபடுத்தி அலங்கரிப்பது அணியிலக்கணம் என்பதை அறிந்து கொள்ளுதல்.
- அணிகளின் வகைகளில் சிலவற்றைத் தெரிந்து கொள்ளல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

தமிழ்மொழி இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகையாக அமைந்துள்ளது. அவற்றுள் செய்யுளின் அழகையும் நயத்தையும் எடுத்து மொழிவது அணி இலக்கணமாகும். மாணவர்களிடம், அணி இலக்கணம் கூறும் நூல்கள் எவை? என்று வினா எழுப்பி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

தொல்காப்பியம்–பொருளதிகாரத்தில் உவமயியல் பின்னாளில் அணி இலக்கணமாக உருவெடுத்தது என்பர். அணியிலக்கணம் கூறும் சிறந்த நூல் தண்டியலங்காரம் ஆகும். தண்டியலங்காரம் நூலின் ஆசிரியர் தண்டி ஆவார். இந்நூல் காவியதர்சம் என்னும் வடமொழி நூலின் தழுவல் என்பர். காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டு ஆகும்.

### அணி இலக்கணம் மட்டும் கூறும் நூல்கள்

1. தண்டியலங்காரம் 2. மாறனலங்காரம் 3. குவலயானந்தம்

### அணி இலக்கணத்தையும் கூறும் நூல்கள்

1. தொல்காப்பியம் 2. வீரசோழியம் 3. இலக்கண விளக்கம் 4. தொன்னூல் விளக்கம் 5. முத்துவீரியம் போன்றவையாகும்

### செயல்பாடு: 1

**உவமை அணி**

அணிகளில் இன்றியமையாதது உவமை அணியாகும். உவமானம் ஒரு தொடராகவும் உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைய, இடையில் உவமஉருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

**சான்று**

> சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
> சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.



12th_General Tamil_RCM_TM.indd 17 14-08-2021 12:17:14

**விளக்கம்**

புடமிடச் சுடுகையில் ஒளிவிடும் பொன்போலத் தவம் இருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் மெருகேரும்.

உவமானம் : சுடச்சுடரும் பொன்

உவமேயம்: துன்பம் சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

உவம உருபு : போல்

இக்குறட்பாவில் உவமை, உவமேயம், உவம உருபு ஆகியவை வெளிப்படையாகப் பயின்று வந்துள்ளதால் உவமை அணி ஆயிற்று.

## செயல்பாடு: 2

**உருவக அணி**

உவமையின் தன்மையை உவமேயத்தின் மேல் ஏற்றிக்கூறுவது உருவக அணியாகும். உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது உருவக அணி எனப்படும்.

**சான்று**

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்த்தாக்கப் பக்கு விடும்.

**விளக்கம்**

இக்குறட்பாவில், பிறரிடம் இரந்து வாழ்வது பாதுகாப்பற்ற தோணியாகவும், கொடை வழங்காதது பாறையாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளன. எனவே இதில் உருவக அணி அமைந்துள்ளது.

## செயல்பாடு: 3

**வேற்றுமையணி:**

இரு பொருள்களின் ஒற்றுமையை முதலில் கூறி, பின்னர் அப்பொருள்களுக்கிடையே வேற்றுமைத் தோன்றக் கூறுவது வேற்றுமையணி அகும்.

**சான்று**

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

**விளக்கம்**

ஒற்றுமை : தீயும் சுடும், வன்சொல்லும் சுடும்.

வேற்றுமை : தீப்புண் ஆறும்: நாவினால் சுட்ட வடு ஆறாது. எனவே இக்குறட்பாவில் வேற்றுமை அணி பயின்று வந்துள்ளது.



12th_General Tamil_RCM_TM.indd 18 14-08-2021 12:17:14

**செயல்பாடு: 4**

**சொற்பொருள் பின்வரும் நிலையணி:**

செய்யுளில் வந்த சொல்லே, மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே தருமாயின் அது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**சான்று**

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

**விளக்கம்**

இக்குறளில் **நாடி** என்னும் சொல் **ஆராய்ந்து** என்னும் பொருளில் பல முறை வந்துள்ளதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.

## மாணவர் செயல்பாடு

- மாணவர்களைக் கரும்பலகையில் அணி இலக்கண நூல்களின் பெயர்களை எழுத வைத்தல்.
- மூன்று குழுவாகப் பிரித்து ஒரு குழு அணியின் இலக்கணத்தையும் மற்றொரு குழு அதற்கான சான்றையும் இன்னொறு குழு அதற்கான விளக்கத்தையும் கூறச் செய்தல்.

## மதிப்பீடு

1. அணி இலக்கணம் கூறும் நூல்களை எழுதுக?

2. உவமை அணியைச் சான்றுடன் விளக்குக

3. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்

பார்த்தாக்கப் பக்கு விடும் – இக்குறட்பாவில் பயின்றுள்ள அணியை விளக்குக



12th_General Tamil_RCM_TM.indd 19 14-08-2021 12:17:14

# 8 இலக்கிய நயம் பாராட்டுக – 1

## கற்றல் விளைவுகள்

- தமிழ்க்கவிதைகளில் காணப்படும் அழகியலை உணரச் செய்தல்
- தமிழ்க்கவிதைகளில் பொதிந்திருக்கும் நயஙகளை உணரும் திறன் பெறுதல்.

**ஆர்வமூட்டல்**

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

என்ற பாடலைக் கேட்கும் போதும் படிக்கும் போதும் எத்தகைய உணர்வு உங்களின் மனங்களில் எழுகிறது என்ற வினாவினைக் கேட்டு அதற்கான பலதரப்பட்ட விடைகளையும் மாணவர்களிடமிருந்து பெற்று ஆர்வமூட்டச் செய்தல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு: 1**

பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நாமக்கல் கவிஞர் முதலான கவிஞர்களின் பாடல்களிலிருந்து இலக்கிய நயத்திற்குரிய பாடல்களைக் கொடுத்து அவற்றிற்கான நயங்களை வினவப்படுவது வழக்கம். அவ்வாறு வினவப்படும் நயங்களாவன,

1. மையக்கருத்து 2. திரண்ட கருத்து 3. தொடை நயம் 4. சந்தநயம் 5. அணி நயம் 6. சுவை நயம் போன்றன.

**செயல்பாடு: 2**

**மையக்கருத்து:**

பாடலில் கவிஞர் கூறக்கருதும் கருத்தே (பொருள்) மையக் கருத்தாகும். இதில் கவிஞரின் உணர்திறனை எழுப்புகின்ற சூழ்நிலைகள் , கருத்துகள் அல்லது உணர்ச்சிகள் மற்றும் கவிதை கட்டமைக்கப்பட்டவை போன்றவை இதில் அடங்கும். பெரும்பான்மை மொழியின் சிறப்பு, நாட்டின் சிறப்பு, தனிமனித புகழ்ச்சி, விடுதலைப் போராட்ட உணர்வு, நாட்டின் அவலம், பெண்விடுதலை ,சமூக சீர்கேடு போன்றவை மையக்கருத்தாக இடம்பெறும் .

**செயல்பாடு: 3**

**திரண்ட கருத்து:**

பாடலின் ஒட்டுமொத்த கருத்துகளே திரண்ட கருத்தாகும். அதாவது நயம் விளக்கி எழுத வேண்டிய செய்யுளை நன்கு பொருள் உணருமாறு இரண்டு மூன்று முறை நன்றாகப் படித்து உள்வாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.


12th_General Tamil_RCM_TM.indd 20 14-08-2021 12:17:14

அச்செய்யுள் உணர்த்தும் பொருளை உணர்ந்த பின்னர், சிறு சிறு தொடர்களில் அப்பொருளைத் திரட்டி இனிய தமிழில் எழுத வேண்டும். அவ்வாறு எழுதும் போது ஒவ்வொரு சொல்லுக்கும் மிக நீண்ட விளக்க உரை எழுத வேண்டியதில்லை. சொல்லுக்கான பொருளை எளிய நடையில் எழுதினால் போதுமானதாகும். இவ்வாறு திரண்ட கருத்தினை எழுத வேண்டும்.

### செயல்பாடு: 4

**தொடை நயம்:**

அடிகளால் தொடுக்கப்படுவது தொடையாகும். மோனைத்தொடை, எதுகைத்தொடை, இயைபுத்தொடை, முரண்தொடை ஆகிய நான்கு வகை தொடைகளையும் பெரும்பான்மையாக ஆசிரியர் பயன்படுத்துவர்.

**மோனைத்தொடை :**

செய்யுளின் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடை ஆகும் இதனை, சீர்மோனை, அடிமோனை எனப் பிரிப்பர்.

**எதுகைத்தொடை :**

செய்யுளின் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்துத் தம்முள் அளவொத்து (மாத்திரை அளவில்) இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகைத்தொடை ஆகும். இதுவும் அடி எதுகை, சீர் எதுகை என இரு வகைகளாகப் பிரிப்பர்.

**இயைபுத்தொடை:**

செய்யுளின் அடிதோறும் அல்லது சீர்தோறும் கடைசியில் நின்ற எழுத்தோ, சொல்லோ ஒன்றி வருவது இயைபு தொடையாகும். இதனையும் சீர் இயைபு, அடி இயைபு எனப் பிரிப்பர்.

**முரண்தொடை**

முரண் = மாறுபாடு. ஒன்றிற்கொன்று நேர் எதிர்மாறாக இருக்கும் வகையில் அமைக்கப்படுவதே முரண்தொடையாகும் .

### மாணவர் செயல்பாடு

- இலக்கிய நயங்கள் எவை என்பதைக் கூறச் செய்தல்.
- ஒரு பாடலைக் கொடுத்து அப்பாடலின் கருத்துகளைக் கூறச் செய்தல்.
- ஒரு மாணவர் தொடை நயங்களின் விளக்கங்களைக் கூற இன்னொரு மாணவரை அதைக் கரும்பலகையில் எழுத வைத்தல்.

### மதிப்பீடு

1. கவிதையில் இடம்பெறும் நயங்கள் எவை?
2. மையக்கருத்து என்றால் என்ன ? அதனை எவ்வாறு அறிந்து கொள்வது?
3. எதுகைத் தொடை எவ்வாறு அமையப்பெறும்?


12th_General Tamil_RCM_TM.indd 21 14-08-2021 12:17:14

# 9 இலக்கிய நயம் பாராட்டுக - 2

## கற்றல் விளைவுகள்

- தமிழ்க்கவிதைகளில் காணப்படும் அழகியலை உணரச் செய்தல்.
- தமிழ்க்கவிதைகளில் பொருந்தியிருக்கும் திறன்களை உணர்ந்து வெளிக்கொண்டுவர செய்தல்.
- இலக்கண விதிகளை அறிந்து இலக்கியத்தைச் சுவைக்கும் திறன் பெறுதல்.

### ஆர்வமூட்டல்

முதல் எழுத்து அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எத்தொடை? என்ற நேற்று நடத்திய பாடத்திலிருந்து வினா கேட்டு அதற்கான பதிலை வரவழைத்து மாணவர்களை ஆர்வமூட்டச் செய்தல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

**சந்தநயம்**

சந்தநயம் என்பது ஓசை, இசை, இன்னோசை ஆகியவற்றைக் குறிக்கும். ஒவ்வொரு பாவும் ஒவ்வொரு ஓசையைப் பெற்று வரும்.

- வெண்பா – செப்பலோசை
- ஆசிரியப்பா – அகவலோசை
- கலிப்பா – துள்ளலோசை
- வஞ்சிப்பா – தூங்கலோசை

என முறையே பாவும் அவற்றின் ஓசைகளைப் பெற்று வரும்.

சிந்துப்பா (நாட்டுப்புற சிந்து) என்ற பாவகையிலும் சில பாடல்கள் வரும். சிந்துப்பா தனிச்சொல் பெற்று வருவதால் வெண்பாவிற்கான செப்பலோசையே இப்பாவிற்கும் வரும்.

இவற்றுள் பெரும்பாலும் ஆசிரியப்பாவும் கழி நெடிலடி ஆசிரிய விருத்தப் பாவும் சிந்து என்னும் இசைப் பாடலும் சந்தநயத்தில் பயின்று வருவனவாகும்.

### செயல்பாடு: 2

**அணிநயம்:**

**அணி = அழகு**

பாடலுக்கு மென்மேலும் அழகூட்ட கையாளப்படும் நயமே அணிநயம். உவமை, உருவகம், இயல்பு நவிற்சி (தன்மையணி), உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம், வேற்றுமை போன்ற பலவகை அணிகள் பயின்று வர கவிஞர்கள் கவிதை புனைவார்கள்.


12th_General Tamil_RCM_TM.indd 22 14-08-2021 12:17:14

கவிஞன் தான் கூறக் கருதிய பொருளை மேலும் அழகூட்ட அணி நயத்தைப் பயன்படுத்துவார். கவிதையில் (செய்யுளில்) கூறப்பட்டுள்ள அணியினைச் சரியாக இனங்கண்டு பின்பு அதன் நயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

### செயல்பாடு: 3

**சுவை நயம்**

| | | | |
|---|---|---|---|
| • நகை | – சிரிப்பு | அச்சம் | – பயம் |
| • அழுகை | – துன்பம் | பெருமிதம் | – புகழ்ச்சி |
| • இளிவரல் | – இயலாமை | வெகுளி | – கோபம் |
| • மருட்கை | – வியப்பு | உவகை | – மகிழ்ச்சி |

இவை ஒவ்வொன்றும் நான்கு பொருளில் வரும் இவற்றில் பெரும்பான்மை பெருமிதச்சுவையே பயின்றுவரும். இது இலக்கியப்பயில் நிலையைச் சார்ந்தது. படிப்போரின் மனவோட்டத்தைச் சார்ந்தது. அதாவது உள்ளத்து உணர்ச்சிகள் உடலில் தென்படுவது.

### செயல்பாடு: 4

**எடுத்துக்காட்டுப் பாடல் மூலம் மேற்கண்ட நயங்களைப் பொருத்திக் காண்போம் .**

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்– புவி
பேணி வளர்த்திடும் ஈசன் ;
மண்ணுக் குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக்– குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதைமை யற்றிடும் காணீர்.

– பாரதியார்

**மையக்கருத்து**

இப்பாடலில் தேசியக்கவி பாரதியார் பெண்கள் கல்வி கற்றால் அறியாமை என்னும் இருள் நீங்கி, அறிவுடைமை என்னும் வெளிச்சம் பெறும் எனப் பெண்கல்வியின் அவசியத்தை மையக்கருத்தாகப் பாடியிருப்பது பாராட்டுக்குரியது.

**திரண்ட கருத்து**

உலகில் அனைத்தையும் படைத்த இறைவன் பெண்களுக்கு நல்ல அறிவையும் தந்துள்ளான். ஆனால் உலகில் உள்ள சில மூடர்கள் அவர்களின் அறிவு பயன்படாது எனக் கருதி அழித்தனர். ஆண்களும் பெண்களும் சமுதாயத்தில் இரு கண்கள் போன்றவர்கள். எனவே அத்தகைய கண்களில் ஒன்றைக் குத்தி காணும் காட்சியைக் கெடுத்து விடலாமா? பெண்கள் அறிவை வளர்த்தால் உலகம் அறியாமை (பேதைமை) நீங்கி அறிவு வெளிச்சம் பெறும் எனப் பாடி இருப்பது சிறப்புக்குரியது.

**தொடை நயம்:**

- மோனைத் தொடை :

  பெண்ணுக்கு – பேணி, மண்ணுக்குள்ளே – மாதர்

- எதுகைத்தொடை :

  பெண்ணுக்கு – மண்ணுக்கு, கண்கள் – பெண்கள்

• எதுகைத்தொடை :

கொடுத்தார் – காணீர்

• முரண்தொடை :

ஞானம் x பேதைமை

வளர்த்திடும் x கெடுத்திடும்

• சந்தநயம் :

சிந்துப்பா வகையில் அமைத்து "செப்பலோசை"அமைய பாடி இருப்பது பாராட்டுக்குரியது.

**அணிநயம்:**

பெண் கல்வியின் தேவையை உள்ளதை உள்ளவாறு பாடியிருப்பதால் தன்மை அணி ( இயல்பு நவிற்சி அணி)பயின்று வந்துள்ளது சிறப்பிற்குரியது.

**சுவை நயம்:**

பெண் கல்வியால் இவ்வுலகம் அறிவு கொள்ளும் எனப் பெருமைப்படப் பாடியிருப்பதால் " பெருமிதச் சுவை " பயின்று வந்துள்ளது பாராட்டிற்குரியது .

மேற்கண்ட நயங்களில் எவையேனும் 4 எழுதினால் போதுமானது.

## மாணவர் செயல்பாடு

✍ மெய்ப்பாடுகளின் வகைகளைக் கூறி, மாணவர்களை வகுப்பில் நடிக்கச் செய்தல்.

✍ ஒவ்வொரு பா விற்கும் என்னென்ன ஓசை வரும் எனக் கூறச் சொல்லல்.

✍ பாடலில் அணிநயம் ஏன் பயன்படுத்துகின்றனர் என்பதைக் கூறச் செய்தல்.

## மதிப்பீடு

1. மெய்ப்பாடு எத்தனை வகைப்படும்? எவ்வாறு தோன்றும்?

2. பாரதிதாசன் பாடல் ஒன்றிற்கு இலக்கிய நயங்கள் எழுதி வரவும்.

3. அணி நயத்தை எவ்வாறு அறிவாய்?



12th_General Tamil_RCM_TM.indd 24 14-08-2021 12:17:14

# 10 வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

## கற்றல் விளைவுகள்

- சந்திப் பிழைகளை அறியச் செய்தல் .
- சந்தி எழுத்துகள் எவை என்பதை அறியச் செய்தல்.
- பிழையின்றி எழுதவும் படிக்கவும் தெரிந்து கொள்ளல்.
- சந்தி மிகுதலாலும் குறைதலாலும் ஏற்படும் பொருள் வேறுபாட்டை அறியச் செய்தல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

மருந்துக்கடை / மருந்து கடை இரண்டு சொற்களுக்குமான வேறுபாடு என்ன? என்ற வினாவினைக் கேட்டு அதற்கான விடையை மாணவர்களிடம் பெற்று அதற்கான விளக்கம் கூறி ஆர்வமூட்டச் செய்தல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

தமிழில் சந்தி என்று சொல்லப்படுகின்ற ஒற்று மிகுதலாலும் குறைதலாலும் சில நேரங்களில் பொருள் வேறுபடுதலும் உண்டு. அவற்றைக் கூர்ந்து கவனித்து நோக்கினால் பொருள் வேறுபாட்டு நுட்பத்தை உணர்ந்து கொள்ளலாம்.

சந்தி என்பதற்கு இணைப்புச் சொல் என்று பெயர் ஆங்கிலத்தில் Conjuction word என்று அழைப்பர். தமிழின் சந்தி எழுத்துகள் க , ச , த , ப ஆகிய நான்கு வல்லின எழுத்துகளாகும்.

வல்லினம் மிகும் இடங்கள் மிகா இடங்கள் எவை என்பதை அறிந்து கொண்டால் தமிழைப் பிழையின்றி எழுதலாம்.

**எ.கா**

அந்தக் கடை – க், அந்தச் சாலை – ச், இந்தத் தேர்தல் –த், எந்தப் பக்கம் – ப்

### செயல்பாடு: 2

### வல்லின ஒற்று மிகும் இடங்கள்:

அந்த , இந்த என்ற சுட்டுப் பெயரடைகளின் பின்பும் எந்த என்ற வினாப் பெயரடையின் பின்பும் வல்லினம் மிகும்.

**சான்று :**

| | | |
|---|---|---|
| அந்த + கடை | = | அந்தக்கடை |
| இந்த + சொல் | = | இந்தச்சொல் |
| எந்த + கேள்வி | = | எந்தக்கேள்வி |



12th_General Tamil_RCM_TM.indd 25 14-08-2021 12:17:14

- **'செய'** என்னும் வினையெச்சங்களின் பின் வலிமிகும்

**சான்று :**

போக + கண்டேன் = போகக்கண்டேன்
வர + சொல் = வரச்சொல்
படிக்க + படிக்க = படிக்கப்படிக்க

- **'ஆக'** என்ற வினையடையின் பின் வலிமிகும்.

**சான்று :**

வருவதாக + சொல் = வருவதாகச்சொல்
அழகாக + பேச = அழகாகப்பேச

- சில தொகைச் சொற்களில் வலிமிகும். அதாவது இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் வலிமிகும்.

**சான்று :**

பலா + பழம் = பலாப்பழம்
வாழை + பழம் = வாழைப்பழம்
மல்லிகை + பூ = மல்லிகைப்பூ

- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வலி மிகும்.

**சான்று :**

நிறைவேறா + கனவு = நிறைவேறாக்கனவு.
வாடா + பூ = வாடாப்பூ.

- இரண்டாம் வேற்றுமை விரியிலும் , இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகையிலும் வலிமிகும்.

**சான்று :**

கதவை + தட்டு = கதவைத் தட்டு
கையை + பிடி = கையைப் பிடி
தயிர் + கடை = தயிர்க்கடை (தயிர் விற்கும் கடை)
மருந்து + கடை= மருந்துக்கடை (மருந்து விற்கும் கடை)

### செயல்பாடு: 3

### வல்லினம் மிகா இடங்கள் :

வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

**சான்று :**

திருவளர் + செல்வன் = திருவளர் செல்வன்
குடி + தண்ணீர் = குடிதண்ணீர்

- உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.

**சான்று :**

செடி + கொடி = செடிகொடி
இரவு + பகல் = இரவு பகல்



12th_General Tamil_RCM_TM.indd 26 14-08-2021 12:17:15

- நல்ல, இன்ன, இன்றைய போன்ற பெயரடைகளின் பின்னும் படித்த, எழுதாத போன்ற பெயரெச்சங்களின் பின்னும் ஒற்று மிகாது.

**சான்று :**

நல்ல + கதை = நல்ல கதை

இன்ன + பெயர் = இன்ன பெயர்

படித்த + புத்தகம் = படித்த புத்தகம்

- மென் தொடர்க் குற்றியலுகரத்தில் வலி மிகாது.

**சான்று :**

பகிர்ந்து + கொண்டான் = பகிர்ந்து கொண்டான்

வந்து + சென்றான் = வந்து சென்றான்

- இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.

**சான்று :**

மருந்து + கடை = மருந்து கடை ( மருந்தைக் கடை )

தயிர் + கடை = தயிர் கடை ( தயிரைக் கடை )

- செய்த என்னும் வினையெச்சத்தின் பின் வல்லினம் மிகாது.

**சான்று :**

செய்த + போது = செய்தபோது

சொன்ன + படி = சொன்னபடி

## மாணவர் செயல்பாடு

- வன்தொடர் குற்றியலுகரச் சொல்லைக் கூறச் செய்தல்
- ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகும் சொற்களைக் கூறச் செய்தல்
- வல்லினம் மிகும், மிகா இடத்திற்குச் சில சான்றுகளைக் கரும்பலகையில் எழுதச் செய்து பயிற்சி கொடுத்தல்.

## மதிப்பீடு

1. வல்லினம் மிகும் சொற்கள் எவை?
2. வல்லினம் மிகும் இடங்கள் இரண்டு கூறி அதற்கான எடுத்துக்காட்டுகள் தருக.
3. வல்லினம் மிகா இடங்கள் எவை? சான்று தருக.



12th_General Tamil_RCM_TM.indd 27 14-08-2021 12:17:15

# 11 மயங்கொலிச் சொற்களைத் தொடராக்குதல்

## கற்றல் விளைவுகள்

- மயங்கொலிச் சொற்கள் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளுதல்
- உச்சரிப்பு முறைகள் பற்றி அறிதல்
- தமிழில் உள்ள மயங்கொலிச் சொற்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல்
- மயங்கொலிச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

மாணவர்களே! 'இன்று மழை பெய்ததால் மைதானத்தில், மண் அரிப்பு ஏற்பட்டு மலை போல் ஓரிடத்தில் குவிந்துள்ளது ' பார்த்தீர்களா ?' என்று கேட்டு மழை, மலை ஆகிய இரண்டு மயங்கொலிச் சொற்களுக்குப் பொருள் என்ன என்று மாணவர்களிடம் பதிலை வரவழைத்து ஆர்வமூட்டுதல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

மயங்கொலிச் சொற்கள் என்பன தமிழில் ஏறத்தாழ ஒரே ஒலிப்பினைக் கொண்டதாகவும், முற்றிலும் வேறுபட்ட பொருள் கொண்டவைகளாகவும் காணப்படும்.

இவ்வகையான சொற்கள் ஒலிப்பின் போது நுண்ணிய வேறுபாடுகளை மட்டுமே கொண்டிருப்பதால் எது சரி, எது தவறு என மயங்க வைப்பவைகளாக இருக்கும். அதனாலேயே இவை மயங்கொலிச் சொற்கள் என்று அழைக்கப்படுகின்றன.

மயங்கொலி எழுத்துகளாக ண, ன, ந, ல, ள, ழ, ர, ற ஆகிய எட்டு எழுத்துகளைக் கூறுவர். இந்த எழுத்துகளை உச்சரிக்கக் கூடிய முறைகளை மூன்று வகையாகக் கூறலாம். அவை.

1. ண –ந –ன ஒலிப்புமுறை
2. ல –ழ –ள ஒலிப்புமுறை
3. ர –ற ஒலிப்புமுறை

### செயல்பாடு: 2

#### உச்சரிப்பு முறைகள்

**ண –ந –ன ஒலிப்பு முறை:**

'ண ' என்ற எழுத்தை 'டண்ணகரம்' என அழைக்கிறோம். இவ்வெழுத்தை ஒலிக்கும்போது, நாக்கு மேலண்ணத்தின் அடிப்பகுதியைத் தொட்டு ஒலிக்க வேண்டும். 'டகரமும்' 'ணகரமும் ' ஒரே இடத்தில் நாக்கைத் தொட்டு உச்சரிப்பதால் ஒலிக்கப்படுகின்றன.



12th_General Tamil_RCM_TM.indd 28 14-08-2021 12:17:15

'ந ' என்ற எழுத்தை 'தந்நகரம் ' என அழைக்கிறோம். இவ்வெழுத்தை ஒலிக்கும்போது அண்பல்லைத் தொட்டு ஒலிக்க வேண்டும். 'தகரமும்' 'நகரமும்' ஒரே இடத்தில் நாக்கைத் தொட்டு உச்சரிப்பதால் ஒலிக்கப்படுகின்றன.

'ன' என்ற எழுத்தை 'றன்னகரம் ' என அழைக்கிறோம். இவ்வெழுத்தை ஒலிக்கும்போது நாக்கு மேலண்ணத்தின் நடுப்பகுதியைத் தொட்டு உச்சரிப்பதால் ஒலிக்கப்படுகின்றது.

'றகரமும்' 'னகரமும்' ஒரே இடத்தில் நாக்கைத் தொட்டு உச்சரிப்பதால் ஒலிக்கப்படுகின்றன.

**ல –ழ –ள ஒலிப்பு முறை:**

'ல ' என்ற எழுத்தை மேல்நோக்கிய 'லகரம்' என அழைக்கிறோம். இவ்வெழுத்தை ஒலிக்கும்போது நுனிநாக்கு முன்பல் வரிசைக்கு மேல் உள்ள அண்ணத்தைத் தொட்டு ஒலிக்க வேண்டும்.

'ள ' என்ற எழுத்தைக் கீழ்நோக்கிய 'ளகரம்' என அழைக்கிறோம். இவ்வெழுத்தை ஒலிக்கும்போது நாக்கு மேலண்ணத்தின் மையப்பகுதியைத் தொட்டு ஒலிக்க வேண்டும்.

'ழ ' என்ற எழுத்தை சிறப்பு 'ழகரம்' என அழைக்கிறோம். இவ்வெழுத்தை ஒலிக்கும்போது, நாக்கு மேலண்ணத்தின் அடிப்பகுதியைத் தொட்டு ஒலிக்க வேண்டும்.

**ர –ற ஒலிப்பு முறை**

'ர' என்ற எழுத்தை இடையின 'ரகரம்' என அழைக்கிறோம். இவ்வெழுத்தை ஒலிக்கும் போது நாக்கு மேலண்ணத்தைத் தொட்டு வருடுமாறு ஒலிக்க வேண்டும்.

'ற' என்ற எழுத்தை வல்லின 'றகரம்' என அழைக்கிறோம். இவ்வெழுத்தை ஒலிக்கும்போது நாக்கு மேலண்ணத்தின் மையப்பகுதியை உரசுமாறு ஒலிக்க வேண்டும்.

**செயல்பாடு: 3**

மயங்கொலிச் சொற்களில் எழுத்துகளை மாற்றி எழுதினால் பொருள் மாறுபடும் என்பதனை, கரும்பலகையில் பல்வேறு சொற்களை எழுதி பொருள் கூறி வேறுபடுத்திக் காட்டுதல்.

தமிழில் உள்ள மயங்கொலிச் சொற்களில் ஒரு சில சொற்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**ண, ன – பொருள் வேறுபாடு**

| | |
|---|---|
| அணல் – தாடி, கழுத்து | அனல் – நெருப்பு, |
| ஊண் – உணவு | ஊன் – மாமிசம் |
| காண் – பார் | கான் – காடு, வனம் |
| திணை – ஒழுக்கம், குலம் | தினை – தானியம், ஒருவகை புன்செய் பயிர் |

**ல, ழ, ள – பொருள் வேறுபாடு**

அலகு – பறவையின் மூக்கு, அளவு, ஆண் பனை

அழகு – வனப்பு

அளகு – சேவல்

**ர, ற – பொருள் வேறுபாடு**

| | |
|---|---|
| அரம் – ஒரு கருவி | அறம் – தருமம், நீதி, கற்பு,கடமை, புண்ணியம் |
| இரத்தல் – யாசித்தல் | இறத்தல் – இறந்து போதல், சாதல் |
| ஏரி – நீர்நிலை, குளம் | ஏறி – உயர்ந்த, மேலே ஏறி |



12th_General Tamil_RCM_TM.indd 29 14-08-2021 12:17:15

**செயல்பாடு: 4**

மயங்கொலிச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுவதைப் பற்றி சில எடுத்துக்காட்டுகள் மூலம் காணலாம்.

**சான்று :**

அளகின் அலகு அழகாக உள்ளது.

ஏரியில் நீர்மட்டம் ஏறி உள்ளது.

பனியில் பணி செய்வது கடினமாக உள்ளது.

இவ்வாறு மயங்கொலிச் சொற்கள், உச்சரிப்பு முறை, பொருள் வேறுபாடு, மயங்கொலிச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுதல் ஆகியவற்றைக் கரும்பலகையின் உதவியுடன் மாணவர்களுக்குத் தெளிவுப்படுத்த வேண்டும்.

## மாணவர் செயல்பாடு

- கரும்பலகையில் மயங்கொலிச் சொற்களை எழுதி, ஒவ்வொரு மாணவனையும் எழுப்பி, பிழையின்றி படிக்கச் சொல்லுதல்.
- மயங்கொலிச் சொற்களைத் தொடராக அமைத்து கரும்பலகையில் எழுதச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. அரம், அறம் – பொருள் வேறுபாடு தருக.
2. மயங்கொலி எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
3. தலை, தளை,தழை – மயங்கொலிச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
4. ண, ன –கர மயங்கொலி எழுத்துக்களில் ஏதேனும் இரண்டு சொற்களை எழுதி பொருள் தருக.



12th_General Tamil_RCM_TM.indd 30 14-08-2021 12:17:15

12

# பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துதல்

## கற்றல் விளைவுகள்

- பிறமொழிச்சொற்களை நாம் பயன்படுத்துவதற்கான காரணத்தை அறிதல்.
- பிறமொழிக் கலப்பு இல்லாமல் பேசும் வழிவகைகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- பேசும்போதும் எழுதும்போதும் நாம் பயன்படுத்தும் பிறமொழிச்சொற்கள் பற்றி அறிதல்.
- பிறமொழிச்சொற்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நடைமுறை சிக்கலை அறிதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

வெளிநாடு செல்வதற்கு விசா, பாஸ்போர்ட் இரண்டும் கட்டாயம் தேவை. இத்தொடரில் விசா, பாஸ்போர்ட் இவ்விரு சொற்களும் பிறமொழிச்சொற்கள் ஆகும். இதற்குச் சரியான தமிழ் சொற்கள் எவை எனக் கேட்டல்.

விசா – நுழைவு இசைவு,

பாஸ்போர்ட் – கடவுச்சீட்டு.

என்ற சரியான தமிழ்ச் சொற்களை மாணவர்களையே கூறச் செய்து ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

பேசும்போதும் எழுதும்போதும் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதால் நமது தமிழ் மொழியில் பல பயன்பாட்டுச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனால் தூய தமிழ் சொற்கள் வழக்கற்றுப் போகும் நிலை உருவாகும். இவற்றைக் களைவதற்கு நாம் செய்ய வேண்டிய ஒரே செயல்பாடு என்னவென்றால், அத்தகைய பிறமொழிச் சொற்களுக்கு நிகரான சரியான தமிழ்ச் சொற்களை மூல நூல்கள் வாயிலாகவும் முன்னோர்கள் மூலமாகவும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இம்முறையைச் சரியான வழியில் நாம் செயல்படுத்துவோமானால் நமது தமிழ்மொழி கலப்பற்ற தூய மொழியாகும் என்பது திண்ணம்.

### செயல்பாடு: 2

பிறமொழிச்சொற்கள் இடம்பெற்ற சில தொடர்களை உதாரணமாக எழுதி சரியான விடையை எழுதுதல்.

**சான்று:**

1. பிசினஸ் சரியாக நடக்காத காரணத்தால் ராமனுக்கு இந்த வருடம் அதிக நஷ்டம் ஏற்பட்டது.
   **தொழில் சரியாக நடக்காத காரணத்தால் ராமனுக்கு இந்த ஆண்டு அதிக இழப்பு ஏற்பட்டது.**



12th_General Tamil_RCM_TM.indd 31 14-08-2021 12:17:15

2. சம்பளம் சரியாகத் தராத காரணத்தால் கம்பெனிக்கு எதிராக ஒர்க்கர்ஸ் எல்லோரும் தர்ணாவில் ஈடுபட்டனர்.

**ஊதியம் சரியாகத் தராத காரணத்தால் குழுமத்திற்கு எதிராகப் பணியாட்கள் எல்லோரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

**செயல்பாடு: 3**

நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் சில பிறமொழிச் சொற்களையும் அதற்கான தமிழ்ச்சொற்களையும் மாணவர்களுக்கு உணர்த்துதல்.

| பிறமொழி | தமிழ்மொழி |
|---|---|
| போலீஸ் | காவலர் |
| உற்சாகம் | மகிழ்ச்சி |
| உத்திரவாதம் | உறுதி |

## மாணவர் செயல்பாடு

**தனி மாணவர் செயல்பாடு :**

- பிறமொழிச் சொற்களைப் படிக்காத மக்களும் பயன்படுத்துகின்றனர். அவர்கள் பயன்படுத்தும் பிறமொழிச்சொற்களை ஒவ்வொரு மாணவராக எழுப்பி கேள்வி கேட்டுச் சரியான பதிலை வரவழைத்தல்.

**சான்று :**

வருஷம், பஸ், போட்டோ, ஸ்டாப், பர்த்டே.

## மதிப்பீடு

1. பிறமொழிச்சொற்களைப் பயன்படுத்துவதால் தமிழில் ஏற்படும் சிக்கல்கள் யாவை ?
2. தொடரில் உள்ள பிறமொழிச் சொற்களை நீக்குக.

   தபால்துறை பரீட்சையில் இங்கிலீஷ் வினாக்களுக்கு இம்பார்டன்ட் கொடுத்துப் படிக்க வேண்டும்.
3. கீழ்க்காணும் பிறமொழிச்சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களை எழுதுக.

   பாஸ்போர்ட், விசா, குரு, அபூர்வம், அக்கினி, அர்ச்சனை.



12th_General Tamil_RCM_TM.indd 32 14-08-2021 12:17:15

# 13 தொடரில் காணப்படும் பிழைகளை நீக்குதல்

## கற்றல் விளைவுகள்

- ஒரு தொடரில் என்னென்ன பிழைகள் ஏற்படும்?
- எழுத்துப் பிழை, சொற்பிழை இவற்றை நீக்கும் வழிமுறைகளை அறிதல்.
- பிழை ஏற்படும் சொற்களின் சரியான உச்சரிப்பை அறிந்து கொள்ளுதல்.
- பிழையின்றி எழுத மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை அறிதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

'என் உசிரு நீ தானே' என்ற தொடரைக் கரும்பலகையில் எழுதி, 'இத்தொடரில் உள்ள பிழையை எவ்வாறு சரி செய்வது?' என மாணவர்களிடம் கேட்டு, 'என் உயிர் நீதானே' என்ற சரியான விடையை மாணவர்களையே கூறச் செய்து ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

எழுதும்போது தொடரில் ஏற்படும் பிழைகளை அறிந்து அவற்றைக் களைந்து சரி செய்வதன் மூலமாக மாணவர்கள் சரியான சொற்றொடர் எழுதும் முறையினை அறிந்து கொள்கின்றனர். மேலும், தமிழில் பிழையின்றி எழுதும் திறனை வளர்த்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், தமிழ்மொழி வளர்ச்சிக்குச் சிறப்பான பங்களிப்பை நம்மால் அளிக்க முடியும். செய்யுள் வழக்கைச் சரியாகப் பயன்படுத்துவதால் தொடரில் ஏற்படும் பிழையைச் சரி செய்ய முடியும். ஒருமைப் பன்மை வேறுபாடுகளை அறிவதும் பிழையற்ற தொடருக்கு வழிவகுக்கும்.

### செயல்பாடு: 2

தொடரில் ஏற்படும் சில பிழைகளை சொற்றொடரில் எழுதி அதைச் சரி செய்து சரியான சொற்றொடரை மாணவர்களுக்கு உணர்த்துதல்.

**சான்று:**

1. நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
   நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.
2. அவனும் அவளும் வந்தது.
   அவனும் அவளும் **வந்தனர்**.



12th_General Tamil_RCM_TM.indd 33 14-08-2021 12:17:15

## மாணவர் செயல்பாடு

### தனி மாணவர் செயல்பாடு:

✍ ஆசிரியர் ஒவ்வொரு மாணவரையும் எழுப்பி அவரவர் வீட்டில் உள்ளவர்கள் பேச்சு வழக்கில் பேசும் பிழைகளை அப்படியே கரும்பலகையில் எழுதச் சொல்லி அதற்கான சரியான விடைகளையும் எழுதச் செய்தல்.

## மதிப்பீடு

1. தொடரில் பிழை ஏற்பட முக்கியக் காரணம் யாது?

2. கீழ்க்காணும் பிழையான சொற்களைத் திருந்திய சொற்களாக மாற்றுக.

   இடது கை, வெளக்கு குடுத்து, மூணு, ஒடம்பு.

3. எகன மொகனயாய்ப் பேசுறான் – பிழை நீக்கி எழுது.

4. எண்ணெ வெல அதிகமாச்சு. – இத்தொடரில் உள்ள பிழை நீக்கி சரியான தொடராக்குக.



12th_General Tamil_RCM_TM.indd 34 14-08-2021 12:17:15

# 14 மரபுப்பிழை நீக்கம்

## கற்றல் விளைவுகள்

- மரபுச் சொற்கள் பற்றி அறிதல்.
- ஒலிமரபு, வினைமரபு, இருப்பிடமரபு அறிதல்.
- தாவர உறுப்பு, இளமைப் பெயர்கள் ஆகியவற்றின் மரபுச் சொற்களை அறிதல்.
- மரபுப்பிழை நீக்கம் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

மாணவர்களே, 'இது என்ன சத்தம்? நாய் குரைக்கிற மாதிரி தெரிகிறதே ' என்று ஏதேனும் மரபுத்தொடரைக் கூறுதல்.

மாணவர்களுக்குத் தெரிந்த மரபுத்தொடரைக் கூறச் சொல்லி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

நமது முன்னோர்கள் எப்பொருளை எந்தச் சொல்லால் வழங்கினரோ, அப்பொருளை அச்சொல்லால் வழங்குவதே மரபுப் பெயராகும்.

உதாரணமாக பறவைகள், விலங்குகள் முதலான உயிரினங்களின் ஒலிகளையும் அவை ஒலிக்கும் முறைகளையும் இவ்வாறு கூற வேண்டும் என்று முன்னோர் கூறிய மரபினைத் தொன்று தொட்டுப் பின்பற்றி வருகின்றனர்.

'காகம் கத்தியது ' எனக் கூறுவது வழக்கம். அவ்வாறு கூறுதல் கூடாது.' காகம் கரையுது' என்பது உரிய மரபுத்தொடர் சொல் ஆகும்.

இவ்வாறு வரும் சில மரபுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

1. ஒலி மரபு
2. வினை மரபு
3. இருப்பிடம் ( மரபு)
4. தாவர உறுப்பு ( மரபு)
5. இளமைப் பெயர்கள்( மரபு)



12th_General Tamil_RCM_TM.indd 35 14-08-2021 12:17:15

**செயல்பாடு: 2**

ஒவ்வொரு மரபுக்கும் சில எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**1. ஒலி மரபு**

| உயிரினம் | ஒலி |
|---|---|
| ஆடு | கத்தும் |
| குதிரை | கனைக்கும் |
| குரங்கு | அலப்பும் |

**2. வினை மரபு**

(வினை– செயல்) நாம் செய்யும் செயல்களுக்கு உரிய மரபுச்சொற்கள் பின்வருமாறு.

| பொருள் | வினை |
|---|---|
| அம்பு | எய்தார் |
| ஆடை | நெய்தார் |
| பால் | பருகினான் |

**3. இருப்பிடம் ( மரபு)**

உயிரினங்களின் வாழ்விடம் மரபுச் சொற்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| கரையான் | புற்று |
| ஆட்டுப் | பட்டி |
| மாட்டுத் | தொழுவம் |

**4. தாவர உறுப்பு ( மரபு)**

தாவரங்களின் உறுப்பு மரபுச் சொற்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| வேப்பந் | தழை |
| நெல் | தாள் |
| வாழைத் | தண்டு |

**5. இளமைப் பெயர்கள் ( மரபு )**

விலங்குகளின் இளமை மரபுச் சொற்கள் அட்டவணை படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கோழிக் | குஞ்சு |
| சிங்கக் | குருளை |
| அணிற் | பிள்ளை |



12th_General Tamil_RCM_TM.indd 36 14-08-2021 12:17:15

**செயல்பாடு: 3**

தொடரிலுள்ள மரபுப் பிழையை நீக்குவது எவ்வாறு என்பதைச் சில எடுத்துக்காட்டுகள் மூலம் காணலாம்.

**சான்று:**

1 .காட்டில் கூகை அகவும்

காட்டில் கூகை **குழறும்**

2. பனை ஓலையால் கூரை போட்டார்

பனை ஓலையால் கூரை **வேய்ந்தார்**

## மாணவர் செயல்பாடு

✍ ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் எழுப்பி கரும்பலகையில் அவரவர் வீட்டில் இருக்கும் பறவைகள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றின் மரபுச்சொற்களை எழுதச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. மரபுப் பெயர் என்பது யாது?
2. ஒலி மரபிற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
3. கீழ்க்காணும் தொடரில் உள்ள மரபுப்பிழையை நீக்கி எழுதுக.

அ) சேவல் கொக்கரிக்க பொழுது புலர்ந்தது.

ஆ) சிங்கக்குட்டி அழகாக உள்ளது.



12th_General Tamil_RCM_TM.indd 37 14-08-2021 12:17:15

# 15 உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்தல்

## கற்றல் விளைவுகள்

- உவமைத்தொடர் பற்றி அறிதல்.
- உவமைத்தொடர் உணர்த்தும் பொருளை அறிந்து கொள்ளுதல்.
- உவமைத்தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

மாணவர்களே! பாடத்தைப் படிக்கும்போது, ஆழமாகப் படிக்க வேண்டும் 'நுனிப்புல் மேய்ந்தாற் போல' படிக்கக்கூடாது. "நுனிப்புல் மேய்ந்தாற் போல" என்ற உவமைத் தொடருக்குப் பொருள் என்ன? என்று மாணவர்களிடம் கேள்வி கேட்டுப் பதிலைக் கூறச் செய்து ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

நன்கு தெரிந்த ஒரு பொருளின் இயல்பை கூறி, தெரியாத ஒரு பொருளின் இயல்பை விளக்குவது உவமையணி அத்தகைய உவமையை உள்ளடக்கிய தொடரே உவமைத் தொடராகும்.

'போல' என்ற உவம உருபு வெளிப்படையாக வரும். இவ்வுவமைத் தொடர்கள் வாக்கியங்களை அழகாக்குவதற்கும், கருத்துகளை ஆணித்தரமாக விளக்குவதற்கும் உதவுகின்றன.

ஒரு செய்தியைத் தெளிவாகவும், செறிவாகவும், உணர்ச்சிமயமாகவும் தெரிவிக்க உவமைத் தொடர் பயன்படுகிறது.

**எடுத்துக்காட்டு :** 'அனலிற் பட்ட மெழுகு போல'

### செயல்பாடு: 2

உவமைத் தொடரில் அமையக்கூடிய உவமைகளை மூன்று வகையாகக் கூறலாம். அவை,

1. பண்பு உவமை
2. தொழில் உவமை
3. பயன் உவமை

**பண்பு உவமை :**

ஒரு பொருளின் வடிவம், நிறம், சுவை, அளவு ஆகியவை அப்பொருளின் 'பண்பு' எனப்படும். இப்பண்புகள் காரணமாக அமைவது பண்பு உவமையாகும்.



12th_General Tamil_RCM_TM.indd 38 14-08-2021 12:17:15

**சான்று :**

பச்சைக் கம்பளம் விரித்தார் போல (நிறம்)

**பொருள் :** பசுமை

**வாக்கியம் :** கிராமங்களில் வயல்வெளி பார்ப்பதற்குப் பச்சைக் கம்பளம் விரித்தார் போல் இருக்கும்.

**தொழில் உவமை :**

ஒரு பொருளின் தொழில் அல்லது செயல் காரணமாக அமையும் உவமை 'தொழில் உவமை' எனப்படும்.

**சான்று :**

பசுத்தோல் போர்த்திய புலி

**பொருள் :** நல்லவன் போல் நடித்தல்.

**பயன் உவமை :**

ஒரு பொருளால் கிடைக்கும் பயன் காரணமாக அமையும் உவமை பயன் உவமை எனப்படும்.

**சான்று :சூரியனைக் கண்ட பனிபோல**

**பொருள் :** பெருந்துன்பம் நீங்குதல்

**செயல்பாடு: 3**

**சான்று :**

| | | |
|---|---|---|
| இலைமறை காய் போல | – | ஆற்றல் வெளிப்படாமல் இருத்தல். |
| அத்தி பூத்தாற் போல | – | அரிதாக |
| நகமும் சதையும் போல | – | ஒட்டி உறவாக இருத்தல். |
| இலவு காத்த கிளி போல | – | காத்திருந்து ஏமாறுதல். |

**செயல்பாடு: 4**

உவமைத்தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுவதைச் சில எடுத்துக்காட்டுகள் மூலம் காணலாம்.

➢ அடியற்ற மரம்போல

**பொருள் :** அடியற்ற – வேரில்லாத

**பயன்பாடு :** பெரும் துன்பம்

**வாக்கியம் :** கணவன் இறந்த செய்தி கேட்ட கண்ணகி அடியற்ற மரம்போலச் சாய்ந்தாள்.

➢ இலை மறை காய் போல



12th_General Tamil_RCM_TM.indd 39 14-08-2021 12:17:15

**பொருள் :** இலைமறை – இலையின் மறைவில்

**பயன்பாடு :** மறைமுகமாக

**வாக்கியம் :** திரைப்படத்தில் ஒரு சில மர்மங்களை இயக்குனர் இலைமறை காய் போலக் காட்டியிருந்தார்.

## மாணவர் செயல்பாடு

✍ ஆசிரியர் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியைக் கூறி, ஒவ்வொரு மாணவரையும் எழுப்பி, அந்நிகழ்ச்சிக்கு உவமையைக் கூறச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. உவமைத்தொடர் என்பது யாது ?
2. உவமைத்தொடரின் பயன் யாது ?
3. கீழ்க்காணும் உவமைத்தொடரை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

அ) இலவு காத்த கிளி போல.

ஆ) சித்திரப்பதுமை போல.

இ) தாமரை இலை நீர் போல.



12th_General Tamil_RCM_TM.indd 40 14-08-2021 12:17:15

# 16 பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல்

## கற்றல் விளைவுகள்

- பேச்சுமொழி என்றால் என்ன என்பதை அறிதல்.
- எழுத்து மொழி என்றால் என்ன என்பதை அறிதல்.
- பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றும் திறன் பெறுதல்.
- எழுத்து மொழி மூலம் மொழி எப்படி வளர்ச்சி அடைந்தது என்பதை அறிதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

மாணவர்களிடம், "நாம் காலத்துக்கு ஏத்த மாறி நம்ம அறிவ வளத்துக்கணும்" என்ற பேச்சு வழக்குச் சொற்றொடரை எழுத்து வழக்காக மாற்ற வேண்டும் என்று கூறி "நாம் காலத்திற்கு ஏற்றாற்போல் நம் அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்" என்ற பதிலையும் கூறி மாணவர்களை ஆர்வமூட்ட வேண்டும்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

### பேச்சுமொழி :

வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழியாகும். இவ்வாறு பேசுவதும் கேட்பதும் மொழியின் முதல்நிலை. மொழியின் உயிர்நாடியாக விளங்குவது பேச்சுமொழியே என்பர். பேசப்படும் சொற்கள் மட்டுமின்றிப் பேசுபவரின் உடல்மொழி, ஒலிப்பதில் ஏற்ற இறக்கம் ஆகியனவும் பேச்சுமொழியின் சிறப்புக் கூறுகளாகும். பேச்சுமொழி உலக வழக்கு என்பர்.

பேச்சுமொழி என்பது இயல்பாக உருவாகும் மொழி வடிவமாகும். இது எழுத்து மொழியில் இருந்து வேறுபட்டது. எந்தவொரு சமூகத்திலும் பேச்சு மொழியே காலத்தால் முற்பட்டது. பல வளர்ச்சியடைந்த மொழிகளில் இன்னும் பேச்சு வழக்கு மட்டுமே உள்ளதைக் காணலாம் .

பேச்சுமொழி இடத்திற்கு இடம் மற்றும் வாழும் சூழலுக்கு ஏற்ப மாறுபடும். இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர். பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையில் உள்ள உறவு சிக்கலானது. பேச்சுமொழி கிளைமொழிகளாக இன்றளவும் நடைமுறையில் வழக்கில் உள்ளது.

### எழுத்து மொழி :

கண்ணால் கண்டு உணருமாறு வரி வடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது எழுத்து மொழியாகும். இவ்வாறு எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் மொழியின் இரண்டாம் நிலை. பேச்சு மொழிக்கு நாம் தந்த வரிவடிவமே எழுத்து மொழி. ஒரு மொழியானது நீண்ட காலம் நிலை பெறுவதற்கு எழுத்து வடிவம் இன்றியமையாதது. எழுத்து மொழி இலக்கிய வழக்கு என்பர்.

**செயல்பாடு: 2**

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| கோர்த்து | கோத்து |
| சுவற்றில் | சுவரில் |
| நாட்கள் | நாள்கள் |
| மனதில் | மனத்தில் |
| பதட்டம் | பதற்றம் |
| சிலவு | செலவு |

போன்ற பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றலாம்..

பேச்சு வழக்கு மற்றும் எழுத்து வழக்கின் மூலம் மொழி வளர்ச்சி அடைகிறது. பேச்சு வழக்கு இல்லாத மொழி, எழுத்து வழக்கு இல்லாத மொழியாக இருக்கும். அதனால் பேச்சு வழக்கின் மூலமே மொழி வளர்ச்சி அடைகிறது.

பேச்சு வழக்குச் சொற்கள் எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றுவதால் மொழி தெளிவடைகிறது. மனிதர்களின் சிந்தனைகள் காலம் கடந்து வாழ்வதற்கு எழுத்து மொழியே காரணமாகிறது. அதனால் பேச்சு வழக்கை எழுத்து வழக்காகப் பிழையின்றி மாற்றுவதன் மூலம் மொழி இன்னும் சிறப்படையும்.

**செயல்பாடு: 3**

| வ. எண் | பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|---|
| 1 | அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் | அவருக்கு நல்லது கெட்டது நன்றாகத் தெரியும். |
| 2 | இப்போ எனக்கு புரிஞ்சு போச்சு நீயும் புரிஞ்சுக்கோ | இப்பொழுது எனக்கு புரிந்துவிட்டது, நீயும் புரிந்து கொள். |
| 3 | காலங்காத்தால எழுந்திருச்சு படிச்சா ஒரு தெளிவு கிடைக்கும் | அதிகாலையில் எழுந்து படித்தால், ஒரு தெளிவு கிடைக்கும். |
| 4 | முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது. | முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது. |

## மாணவர் செயல்பாடு

- ✍ கரும்பலகையில் பேச்சு வழக்குச் சொல் ஒன்றை எழுதி ஒரு மாணவனை எழுத்து வழக்குச் சொல்லாக மாற்ற கூறுதல்

## மதிப்பீடு

1. பேச்சு வழக்கு என்றால் என்ன?
2. பேச்சு வழக்கு மொழிக்கு எவ்வாறு பயன்படுகிறது?
3. பேச்சுவழக்கிற்கும், எழுத்து வழக்கிற்கும் உள்ள வேறுபாடுகள் யாது?



12th_General Tamil_RCM_TM.indd 42 14-08-2021 12:17:15

# 17 பழமொழி– வாழ்க்கை நிகழ்வு

## கற்றல் விளைவுகள்

- பழமொழி நம் தமிழ் மரபோடு ஒன்றிணைந்தது என்பதை அறிதல்.
- பழமொழி அனுபவத்துடன் அறிவுரையும் உணர்த்துகிறது என்பதை உணர்தல்.
- ஒவ்வொரு பழமொழியின் சிறப்பைப் படித்து அதன் உண்மைப் பொருளை அறிதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

மாணவர்களே! உங்களுக்குத் தெரிந்த பழமொழி ஏதாவது ஒன்றைக் கூறி அதற்குரிய விளக்கம் சொல்லவும் எனக்கூறி மாணவர்களுடன் கலந்துரையாடி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

கிராமப்புறங்களில் ஒரு சில செய்கையைக் குறிக்கவும், அதன் மூலம் கருத்துச் சொல்லவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நம் முன்னோர்கள் பழமொழிகளைச் சொல்லி வந்தனர்.

பழமொழி என்பது ஒரு செயலுக்கு விளக்கம் தரவும், அனுபவத்துடன் சேர்ந்து அறிவுரை தரவும் சொல்லப்படுகிறது. ஆனால் தற்பொழுது பல பழமொழிகளுக்கு அதற்குரிய பொருள் சொல்லப்படாமல் நாளடைவில் மருவி வேறு ஏதோ பொருள் சொல்லப்படுகிறது .

**சான்று:** புண்பட்ட மனதை புகை விட்டு ஆத்து .

**உண்மைப் பொருள்:** புண்பட்ட மனதை புக விட்டு ஆற்று.

மனம் புண்பட்டு இருக்கும் போது தமக்குப் பிடித்த வேறு ஒரு செயலில் மனதைப் புக விட்டு ஆற்றிக்கொள்ள வேண்டும் என்பதே சரி.

### செயல்பாடு: 2

பழமொழி எவ்வாறு வாழ்க்கை நிகழ்வோடு பொருந்துகிறது என்பதை ஒரு சில எடுத்துக்காட்டு மூலம் விளக்குதல்.

**சான்று** " தன் கையே தனக்கு உதவி "

### பழமொழி விளக்கம்:

ஒரு பணியைச் செய்வதற்குப் பிறரை நம்பாமல் தன்னை மட்டுமே நம்புவது சிறப்பு.

**வாழ்க்கை நிகழ்வு :**

செல்வம், இராமு இருவரும் மிக நெருங்கிய நண்பர்கள். செல்வம் பல வேலைகளை இராமுவுக்காகச் செய்து தந்திருக்கிறான். இராமுவும் அவனாலான பல உதவிகளைச் செய்துள்ளான். ஒருநாள் செல்வத்திடம் அவன் அண்ணன் என்னுடைய கல்லூரி தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த இன்றே கடைசி நாள்; கொஞ்சம் கட்டணத்தைச் செலுத்தி விடு; எனக்குப் படிக்க நிறைய உள்ளது என்று கூறிச் சென்றுவிட்டான் . செல்வம், இராமுவின் வீட்டிற்கு அருகில் தானே வங்கி உள்ளது எனக்காக இராமு பணத்தைக் கட்டி விடுவான் என எண்ணி அவனிடம் பணத்தைக் கொடுத்து விட்டு விளையாடச் சென்று விட்டான். அன்று வங்கியில் கூட்டம் அதிகம் என்று கூறி பணத்தைக் கட்டவில்லை. மறுநாள் பணம் கட்டியதால் தேர்வு எழுதும் வாய்ப்பைச் செல்வத்தின் அண்ணன் இழந்து விட்டான். செல்வத்தின் கவனக்குறைவால் அவன் அண்ணன் பாதிக்கப்பட்டான்.

இராமுவை நம்பாமல் செல்வம் அவன் வேலையை அவனே செய்திருந்தால் அவன் அண்ணன் தேர்வு எழுதியிருப்பான்.

**"தன் கையே தனக்குதவி"**

## மாணவர் செயல்பாடு

✍ ஆசிரியர் ஒவ்வொரு மாணவரையும் ஒரு பழமொழியைக் கரும்பலகையில் எழுதச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. "வாய்மையே வெல்லும்" என்ற பழமொழிக்கு ஏற்ப வாழ்க்கை நிகழ்வு எழுதுக ?
2. உனக்கு மிகவும் பிடித்த பழமொழிகள் ஐந்தினை எழுதுக?


12th_General Tamil_RCM_TM.indd 44 14-08-2021 12:17:15

# 18 கலைச்சொல்லாக்கம்

## கற்றல் விளைவுகள்

- கலைச்சொல்லாக்கம்–பொருள் விளக்கம் அறிதல்.
- துறை சார்ந்த கலைச் சொற்களைத் தெரிந்து கொள்ளல்.
- கலைச்சொல்லாக்கம் – காலத்தின் தேவை என்பதைப் புரிந்து கொள்ளல்
- கலைச்சொற்களை உருவாக்கவும் பயன்படுத்தவும் செய்தல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல்**

மாணவர்களே! இன்றைக்குப் பெரும்பான்மை மக்கள் Smart Phoneஐ (திறன்பேசி) பயன்படுத்துகின்றனர். அதனுள் Whatsapp (புலனம்), Facebook (முகநூல்), Instagram (படவரி), Twitter (கீச்சகம்) போன்ற சமூக தளத்தில் தங்களின் கருத்துகளையும் வெளிப்படுத்துகின்றனர். அதேவேளை, அவற்றின் பெயர்களை ஆங்கிலத்திலேயே பேசி வருவதைக் கேட்கமுடிகிறது. பேச்சு வழக்கில் ஆங்கிலச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்துவதால் 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே!' என்ற பாரதியின் கவிதை வரி பொய்த்துப் போகாதா? எனக்கூறி தமிழ்ப்பற்றை வளர்க்கும் விதமாக மாணவர்களுடன் கலந்துரையாடி திறன்பேசியில் உள்ள செயலிகளுக்குரிய தமிழ்ச் சொல் என்ன? என்ற வினா எழுப்பி மாணவர்களிடம் பதிலை வரவழைத்து ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு: 1**

**கலைச்சொற்கள் – பொருள் விளக்கம்.**

தேனொக்கும் செந்தமிழில், பிறமொழிக் கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப இனிமை தமிழ் சொற்களை உருவாக்கிக் கொள்வது கலைச்சொல்லாக்கம் ஆகும். உலக நாடுகளில் நவீன கண்டுபிடிப்புகளின் பெயர்களைத் தமிழ்சொல்லாக மாற்றல் வேண்டும். ஒரு மொழியில் காலத்துக்கு ஏற்ப, துறை சார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக உருவாக்கிப் பயன்படுத்தப்படும் சொற்களைக் கலைச்சொற்கள் என்கிறோம். அவை, மருத்துவக் கலைச்சொற்கள், கல்வித்துறை சார்ந்த கலைச்சொற்கள், தகவல் தொழில் நுட்பக் கலைச்சொற்கள் போன்ற பல்வேறு துறையாகப் பகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பாடநூல் கழகம் இருபதுக்கும் மேற்பட்ட துறைசார்ந்த கலைச்சொற்களை உருவாக்கி வெளியிட்டுள்ளது.

**மருத்துவக் கலைச்சொற்கள் :**

| | |
|---|---|
| மருத்துவமனை | CLINIC |
| குருதிப்பிரிவு | BLOOD GROUP |
| மருந்தாளுனர் | PHARMACIST |
| ஊடுகதிர் | X– RAY |
| குடற்காய்ச்சல் | TYPHOD |



12th_General Tamil_RCM_TM.indd 45 14-08-2021 12:17:15

கல்வித்துறை கலைச்சொற்கள் :

| | |
|---|---|
| எழுது சுவடி | NOTE BOOK |
| விடைச் சுவடி | ANSWER BOOK |
| பொதுக் குறிப்புச் சுவடி | ROUGH NOTE BOOK |
| விளக்கச் சுவடி | PROSPECTUS |

**தகவல் தொழில்நுட்பக் கலைச்சொற்கள் :**

| | |
|---|---|
| இணையம் | WEBSITE |
| வலைப்பூ | BLOG |
| மின்னஞ்சல் | E– MAIL |
| பலகணி 10 | WINDOWS –10 |

**செயல்பாடு: 2**

**அகராதி – கலைச்சொல்லாக்கம் வேறுபாடு :**

பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவது அகராதி எனப்படும். கலைச்சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிற மொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையான இடத்துப் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவதாகும்.

| | |
|---|---|
| வலவன் | PILOT (பழந்தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்துதல்) |
| மூலக்கூறு | MOLEKULE ( புதுச்சொல் ) |

**செயல்பாடு: 3**

**கலைச்சொல்லாக்கம் காலத்தின் தேவை :**

பிற நாட்டு அறிஞர்களின்– மருத்துவம், தொழில்நுட்பம், வானியல், கல்வித்துறை, வேளாண்மை, பொறியியல் சார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்குக் கலைச்சொற்களை உருவாக்குவது காலத்தின் தேவையாகும். அவ்வாறு செய்தால் தமிழ்மொழி வளம் பெறும். மொழி, காலத்திற்கேற்ப தன்னைத் புதுப்பித்துக் கொள்ளும்.

கலைச்சொல்லாக்கப் பணி தொடங்குவதற்கு முன் சில விதிமுறைகளைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

- ஆக்கப்பெறும் சொல் தமிழ்ச் சொல்லாக இருத்தல் வேண்டும்.
- வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும்,
- தமிழ் இலக்கண மரபுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- பொருள் பொருத்தமுடையதாக, அதே நேரத்தில் செயலைக் குறிப்பதாக அமைதல் வேண்டும்.
- ஓசை நயமுடையதாக இருத்தல் வேண்டும். நல்லவை அல்லாதவற்றைக் குறிக்கக் கூடாது.
- பழந்தமிழ் இலக்கியச் சொற்களையும் பேச்சுவழக்குச் சொற்களையும் புதிய சொற்களையும் பயன்படுத்த வேண்டும்.


12th_General Tamil_RCM_TM.indd 46 14-08-2021 12:17:15

**செயல்பாடு: 3**

**கலைச்சொல்லாக்கம் காலத்தின் தேவை :**

காலத்திற்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் மொழியே வாழும். மருத்துவம், பொறியியல், தொழில்நுட்ப அறிவியல் ஆகியவற்றைத் தமிழ்வழியில் பயில கலைச்சொல்லாக்கம் இன்றியமையாததாக உள்ளது.

தாய்மொழிவழிக் கல்வி புதிய கண்டுபிடிப்புகளைச் செய்ய துணை நிற்கும். ஜப்பானியர்கள், தாய்மொழி வழியில் அறிவியல் பாடங்களைக் கற்பதால் நாள்தோறும் புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்கின்றன.

**கலைச் சொல் அறிவோம் :**

| | |
|---|---|
| அழகியல் | AESTHETICS |
| இதழாளர் | JOURNALIST |
| கலை விமர்சகர் | ART CRITIC |
| புத்தக மதிப்புரை | BOOK REVIEW |
| புலம்பெயர்தல் | MIGRATION |
| மெய்யியலாளர் | PHILOSOPHER |
| இயற்கை வேளாண்மை | ORGANIC FARMING |
| வேதி உரங்கள் | CHEMICAL FERTILIZERS |
| ஒட்டு விதை | SHELL SEEDS |
| தொழு உரம் | FARMYARD MANURE |
| அறுவடை | HARVESTING |

## மாணவர் செயல்பாடு

- புதிய கலைச்சொற்களை இதழ்கள், மின்இதழ்கள், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையதளத்தில் தேடி எழுதி வரச் செய்தல்.
- ஏதேனும் ஒரு துறை சார்ந்த கலைச்சொற்களைக் கரும்பலகையில் எழுதச் சொல்லுதல்.

## மதிப்பீடு

1. கலைச்சொல்லாக்கம் – பொருள் தருக.
2. அகராதி கலைச்சொல்லாக்கம் வேறுபடுத்துக.
3. வேளாண்மைக் கலைச் சொற்களை எழுதுக.

# 19 கருத்துப் படத்தைப் பத்தியாக்குக / சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் எழுதுதல்.

## கற்றல் விளைவுகள்

- பத்தி எழுதும் நுட்பத்தை அறிந்து கொள்ளல்
- பத்தி எழுதுதல் கட்டுரை எழுத உதவும் என்பதை அறியச் செய்தல்.
- கருத்துப் படத்தை எளிமையாகப் புரிந்து கொள்ள பத்தி எழுதுதல் உதவும் என்பதை அறியச் செய்தல்.
- சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் தொடராக அமைத்தும் நுட்பத்தை அறிந்து கொள்ளல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

செய்தித்தாள்களில் கேலிச்சித்திரம் (CARTOON) என்ற பகுதியைப் படித்து உள்ளீர்களா? படித்து அதன்மூலம் என்ன தெரிந்து கொண்டீர்கள் என்ற வினாவைக் கேட்டு அதற்கான பதிலைப் பெற்று ஆர்வமூட்டச் செய்தல்.


## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

நாம் கூற விரும்பும் கருத்தினைச் சுவை படவும் பிறர் எளிதாகப் புரிந்து கொள்ளவும் பத்தி அமைத்து எழுதுதல் இன்றியமையாதது. பற்பல கருத்துகள் அடங்கிய ஒரு செய்தியைப் பற்றி எழுதும் பொழுது அதனை பத்தியாக்கி எழுதினால் அதிலுள்ள கருத்துகளை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

அதேபோல் கருத்துப்படம் ஒன்றைக் கொடுத்து அதனைப் பத்தியாக எழுதச் சொல்வதினால் அதிலுள்ள கருத்துகள் எளிதில் புரியும்.

**கருத்துப்படம்:**






12th_General Tamil_RCM_TM.indd 48 14-08-2021 12:17:16

தமிழ்மொழியின் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகைப்படும். அவற்றுள் பொருள் இலக்கணமானது அகப்பொருள், புறப்பொருள் என இருவகைப்படும். அகப்பொருளை, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று மூன்று வகையாகப் பிரிப்பர். அதனுள் முதற்பொருள் நிலமும் பொழுதுமாகும். பொழுதானது சிறுபொழுது, பெரும்பொழுது என்று இருவகைப்படும்.

இவ்வாறு கொடுக்கப்பட்ட கருத்துப் படத்தைப் பத்தியாக எழுத வேண்டும்.

### செயல்பாடு: 2

தொடரில் உள்ள சொற்களைப் பிரித்தும் சேர்த்தும் எழுதும்போது வெவ்வேறு பொருளைத் தருகின்றன. அதனால் இடத்திற்கு ஏற்ப அச்சொற்களைப் பிரித்தும், சேர்த்தும் தொடர் அமைப்பதினால் அதிலுள்ள கருத்துகள் எளிதாகப் புரியும்.

**எடுத்துக்காட்டு:**

1. கால்நடை– கால்நடைகளை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக்கொண்டு போனார்கள்.
   சிறிய தொலைவைக் கடக்க கால் நடையாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.
2. பிண்ணாக்கு– கடலைப் பிண்ணாக்குக் கால்நடைக்குத் தீவனமாகப் பயன்படும்.
   பாம்பு தன் பிண்ணாக்கை (பிள் நாக்கு) வெளியே நீட்டியது.
3. எட்டுவரை– அவன் எட்டுவரை தெளிவாக எழுதினான்.
   தன் நிலத்தில் எட்டுவரை (எள் துவரை) விதைத்தான்.
4. அறிவில்லாதவன்– அறிவு இல்லாதவனுக்கு எதையும் பலமுறை சொன்னால்தான் புரியும்.
   ஆசிரியர் கந்தனைப் பார்த்து "நீ அறிவில் ஆதவன்" என்று கூறிப் புகழ்ந்தார்.
5. தங்கை–தங்கை தன் அண்ணனைப் போற்றிப் பேசினாள்.
   பண்புடையோர் தங்கையே (தம் கையே) தமக்கு உதவி என வாழ்வர்.
6. வைகை– மதுரையில் வைகை நதி பாய்கிறது.
   மாணவர்களைப் பேசாமல் வாயில் வை கை என்று ஆசிரியர் கூறினார்.
7. நஞ்சிருக்கும்– வாழைப்பழம் நஞ்சிருக்கும்போது உண்ணக்கூடாது.
   பாம்புக்குப் பல்லில் நஞ்சு இருக்கும்.

## மாணவர் செயல்பாடு

- பலகை என்ற சொல்லைக் கரும்பலகையில் எழுதி அதனைச் சேர்த்தும் பிரித்தும் பொருள் சொல்ல செய்தல்.
- கருத்துப்படம் வரைந்து பொருள் கூறச் செய்தல்.

## மதிப்பீடு

1. செய்தித்தாள்களில் வந்துள்ள கருத்துப்படத்தைச் சேகரித்துப் பத்தியாக எழுதுக.
2. தாமரை, கோவில் – இச்சொற்களை பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.



12th_General Tamil_RCM_TM.indd 49 14-08-2021 12:17:16

# 20 பத்தி கொடுத்து வினா அமைத்தல் / கடித இலக்கியம்

## கற்றல் விளைவுகள்

- வினா கேட்கும் நுட்பத்தை அறியச் செய்தல்.
- எதிர்காலத்தில் வினாத்தாள் அமைக்கும் திறனை அறியச் செய்தல்.
- கடித இலக்கியம் பற்றி அறிந்து கொள்ளச் செய்தல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல்**

"திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இது முப்பால் என்றும் அழைப்பர்....... இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு. போப் ஆவார்." என்ற பத்தியைச் சொல்லி இதிலிருந்து மாணவர்களைக் கேள்வி கேட்கச் செய்து ஆர்வமூட்டல்.

தற்போது உள்ள நவீன தொழில்நுட்பத்திற்கு முன்பு தகவல் பரிமாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது? என்ற வினாவினைக் கேட்டு அதற்கான பலதரப்பட்ட தரவுகளைப் பெற்று மாணவர்களை ஆர்வமூட்டச் செய்தல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு: 1**

நாம் கூற விரும்பும் கருத்தினைச் சுவைபடவும் பிறர் எளிதாகப் புரிந்து கொள்ளவும் பத்தி அமைத்து எழுதுவர். அவற்றுள் பற்பல கருத்துகள் அடங்கியிருக்கும். ஏதாவதொரு தலைப்பை எடுத்துக்கொண்டு, அதுபற்றிய முழுமையான செய்திகளையும் அப்பத்தியிலேயே கூறியிருப்பர். அவ்வாறு கூறப்பட்ட செய்திகளிலிருந்து நாம் வினா கேட்க வேண்டும். அப்படிக் கேட்கப்படும் வினாக்கள் நுட்பம் உடையதாக இருக்க வேண்டும். இவற்றுள் இலக்கண வினாக்களையும் அமைத்துக் கொள்ளலாம்.

**சான்றாக**

செந்தமிழ்ச்செம்மல் டாக்டர். ஜி.யு. போப், 1839ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிற்கு வந்தார். சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழில் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ்மொழியை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தில் தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

**வினா அமைத்தல்**

1. 'செந்தமிழ்ச் செம்மல்' என்று அழைக்கப்பட்டவர் யார்?
2. ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நூல் எது?
3. வந்தார், படித்து – இலக்கணக் குறிப்பு தருக.
4. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

ஆங்கிலேயரான அவரின் தமிழுரைக் கூடியிருந்த தமிழர்களுக்கு பெரு வியப்பளித்தது.


12th_General Tamil_RCM_TM.indd 50 14-08-2021 12:17:16

### செயல்பாடு: 2

#### கடித இலக்கியம்

மனிதன் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்ட பின்பு தொலைவில் இருப்போருக்குத் தன் கருத்தைத் தெரிவிக்கும் பாலமாகப் புறாவின் காலில் கடிதத்தைக் கட்டி அனுப்பினான். அஞ்சல் தூதுவனான புறா, பிற்காலக் கடித அஞ்சல் முறைக்கு முன்னோடியாகத் திகழ்கின்றது எனலாம். புறாவிடு தூது மட்டுமின்றித் தமிழில் உள்ள தூது இலக்கியங்களும் கருத்தைப் பரிமாறிக்கொள்ளும் கடிதத்தின் தன்மையைக் கொண்டுள்ளதைக் காணலாம்.

கடிதமுறை பரவலான பின்பு உலகை இணைக்கும் தொடர்புக் கருவியாகக் கடிதம் திகழ்ந்தது. கடித முறை புழக்கத்தில் இருந்த கால எல்லையில், மாணாக்கர்கள் 'பேனா நண்பர்கள்' என்னும் பெயரில் கடிதங்கள் எழுதி உலக அளவில் தங்கள் தொடர்புகளை வளர்த்துக் கொண்டனர்.

### செயல்பாடு: 3

- கடிதத்தின் வகைகள்
- மன்றல் வாழ்த்துக் கடிதம்
- பிறந்தநாள் வாழ்த்துக் கடிதம்
- அன்புக்கடிதம் /ஆறுதல் கடிதம்
- கண்டிப்புக் கடிதம்
- அலுவலகக் கடிதம்
- முறையீட்டுக் கடிதம்
- இசைவுக் கோரும் கடிதம்
- மகவுப்பேற்று வாழ்த்துக் கடிதம்
- காதல் கடிதம் / எதிர்பார்ப்புக் கடிதம்
- நட்புக்கடிதம்
- வணிகக்கடிதம்
- நீத்தார் நினைவுக் கடிதம்
- இசைவுக் கடிதம் எனக் கடிதங்கள் பற்பல வகையாக உள்ளன.

இவ்வாறு கடிதங்களின் மூலமாகத் தான் கூறவந்த கருத்துகளை எல்லாம் எழுதிய முறை, தமிழில் கடித இலக்கியமாக மலர்ந்தது.



12th_General Tamil_RCM_TM.indd 51 14-08-2021 12:17:16

**செயல்பாடு: 4**

கடித இலக்கியத்தின் இன்றைய நிலை கடிதம் எழுதுதல் என்னும் வழக்கம் அருகிவிட்டது. தற்போது தொலைபேசி, தொலைநகல், குறுஞ்செய்தி, மின்னஞ்சல், முகநூல் போன்றவற்றின் மூலம் தகவல் பரிமாறப்படுகிறது.

அவ்வகையில் மின்னஞ்சல் மூலம் தகவல் பரிமாறப்படுவதை "இதழாளர் பாரதி" என்ற பாடத்தில் காணலாம். அப்பாடத்தில் பாரதியாரின் இதழியல் பணி பற்றியும், இதழியல் பணியில் அவர் செய்த புரட்சி பற்றியும் தந்தை மகளின் மின்னஞ்சல் கடிதம் மூலம் அறியலாம்.

## மாணவர் செயல்பாடு

- கடிதம் பற்றி மாணவர்களின் கருத்தைக் கூறச் செய்தல்.
- மாணவர்களின் கடித அனுபவத்தைக் கூறச் செய்தல்.
- புத்தகப் பகுதியில் ஒரு பகுதியைப் படிக்கச் செய்து அதில் வினா கேட்கச் செய்தல்.

## மதிப்பீடு

1. வினா கேட்டலின் பயன் என்ன?
2. கடித இலக்கியம் என்றால் என்ன? விளக்குக.
3. வரலாற்றுச் சிறப்புமிக்க கடிதங்கள் எவை?



12th_General Tamil_RCM_TM.indd 52 14-08-2021 12:17:16

# 21 தமிழாக்கம்

## கற்றல் விளைவுகள்

- தமிழாக்கம் பொருள் உணரச்செய்தல்.
- தமிழாக்கம் எப்படி மேற்கொள்ளுதல் என்பதை அறிதல்.
- பிறமொழிச் சொற்களின் உச்சரிப்பை தெரிந்து கொள்ளுதல்.
- தமிழாக்கம் செய்யும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை உணர்ந்து எழுதச் செய்தல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

மாணவர்களே "Good Morning to All" என்று கூறி இதை நாம், எப்படி தமிழ் மொழியில் அழைப்போம் என்று மாணவர்களிடம் கேட்டு அவர்களிடமிருந்து "காலை வணக்கம்" என்று பதில் கூற வைத்தல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

நாம் பிறமொழி சொற்களைத் தமிழ்ப்படுத்துதல் மூலம் புதிய சொற்களை அறிந்து கொண்டு அறிவு புலமையும், மொழி எழுச்சியும் பெற்று நம் மொழி வளர்ச்சிக்குச் சிறப்பான பங்களிப்பை அளிக்க முடியும்.

பிறமொழியில் உள்ள சிறந்த இலக்கண இலக்கியங்களையும் தமிழாக்கம் செய்யும் பொழுது நம் மொழி புதியதொரு உச்சத்தைப் பெற்று வளர்ச்சியடைகிறது. இதன் மூலம் நம் மொழி வல்லுநர்கள் புதிய புதிய சொற்களை உருவாக்கி நம் மொழி வளர்ச்சிக்கு வளம் சேர்க்கின்றனர்.

### செயல்பாடு: 2

தமிழாக்கம் செய்யும்போது மிகக் கவனமாக நாம் செயல்பட வேண்டும். தமிழாக்கம் செய்யும் போது நாம் எந்த மொழியில் இருந்து செய்கின்றோமோ அந்த மொழிக்கு எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் தமிழாக்கம் செய்ய வேண்டும். தமிழாக்கம் செய்யும் சொற்கள் நம் மொழியின் பொருள் பொருத்தமுடையதாக இருக்க வேண்டும். அச்சொற்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் இருத்தல் வேண்டும்.

### செயல்பாடு: 3

- The Pen is mightier then the sword.
  கத்தி முனையைக் காட்டிலும் பேனா முனை வலிமை வாய்ந்தது
- A picture is worth a thousand words.
  ஓர் ஓவியம் ஆயிரம் வார்த்தைகளுக்குரிய சிறப்பு உடையது.
- Work while you work Play while you play.
  செய்வதைத் திருந்தச் செய்.

- Knowledge rules the world.
  அறிவே உலகை ஆள்கிறது.
- A new language is a new life.
  புது மொழி என்பது புது வாழ்க்கையைப் போன்றது.
- Look before you Leap.
  ஆழம் தெரியாமல் காலை விடாதே.
- Knowledge of languages is the door way to wisdom.
  பன்மொழி அறிவு என்பது அறிவு வளம் பெற வாயிலாகும்.
- The Limits of my language are the limits of my world.
  மொழிக் குறைபாடு என்பது உலகை அறிய தடையாகும்.

### ஆங்கிலச் சொற்களின் தமிழாக்கம்

1. Smart phone – திறன்பேசி
2. Bug – பிழை
3. Ceiling – உச்சவரம்பு
4. Carrom – நாலாங்குழி ஆட்டம்
5. Account – பற்று வரவுக் கணக்கு
6. Plastic – நெகிழி
7. Apartment – அடுக்ககம்
8. Straw – வைக்கோல்

## மாணவர் செயல்பாடு

✍ கரும்பலகையில் ஆங்கிலச் சொல்லை எழுதி ஒரு மாணவனை எழுப்பி அதற்கு சரியான தமிழாக்கம் கூறுக என்று சொல்லுதல்.

## மதிப்பீடு

1. பின்வரும் சொற்களைத் தமிழ்ப் படுத்திக் கூறுக.
   - போலீஸ்
   - விசா
   - பாஸ்போர்ட்
   - ஜோடி
   - ஜெர்னலிஸ்ட்
2. "Winners don't do different things, day do things differently" – தமிழாக்கம் தருக.



12th_General Tamil_RCM_TM.indd 54 14-08-2021 12:17:16

# 22 பா இயற்றப் பழகலாம்

## கற்றல் விளைவுகள்

- கவிதை (பாடல்)எழுதுவதற்கான நுட்பத்தை அறிந்து கொள்ளுதல்.
- இலக்கண அறிவை வளர்த்துக் கொள்ளுதல்.
- கற்பனைத் திறனை வளர்த்துக் கொள்ள உதவுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

செய்யுள்/உரைநடை இரண்டிற்குமான வேறுபாடு என்ன? என்ற வினாவினைக் கேட்டு அதற்கான விடையை மாணவர்களிடமிருந்து பெற்று அதற்கான தெளிவான விளக்கமளித்து ஆர்வமூட்டச் செய்தல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

### கவிதை இலக்கியங்கள் :

கவிதைகளை மரபுக் கவிதைகள், புதுக்கவிதைகள், ஹைக்கூ, குக்கூ, சென்ரியூ கவிதைகள் எனக் கவிதைகளைப் பலவகைகளாகப் பாகுபடுத்தலாம். இவை அனைத்தும் மரபுக்கவிதை ,புதுக்கவிதை என்னும் இருவகைக்குள் அடங்கும். மரபுக்கவிதைகள் இலக்கண வரம்புகள் உடையன. புதுக்கவிதைகள் இலக்கண வரம்புகளுக்கு உட்படாதவை.

பாடல், கவிதை, பா, செய்யுள், தூக்கு, கவி, பாட்டு ஆகிய சொற்கள் ஒரே பொருளில் வருவன. தமிழ்ச் செய்யுள் வடிவங்கள் பெரும்பாலும் இசையை அடிப்படையாகக் கொண்டவை. ஓசையே தமிழ்ச்செய்யுளை மெருகேற்றும். இவ்வோசை செய்யுளுக்கு மேலும் அழகு சேர்க்கிறது. ஒவ்வொரு பாவும் ஒவ்வொரு ஓசை வடிவம் கொண்டவை.

### செயல்பாடு: 2

### மரபுக் கவிதைகள் :

மரபு என்பது தொன்றுதொட்டு வழங்கி வருவது. அதேபோல் மரபுக் கவிதை என்பது தொன்றுதொட்டு வழங்கி வரும் இலக்கண வரையறைக்குட்பட்டது. அவற்றில் அசை, சீர், தளை, அடி, தொடை போன்ற செய்யுள் உறுப்புகள் காணப்படும். அதன் ஓசையை (இசையை) ஒழுங்குபடுத்த மோனை, எதுகை, முரண், இயைபு போன்றவை அவற்றுடன் பிணைந்திருக்க வேண்டும்.

இதில் பாவும் பாவினங்களும் யாப்பின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். நான்கு வகை பாக்களும் அவற்றின் இலக்கணம் பற்றியும் நம் பாடப் பகுதியில் கூறப்பட்டுள்ளன.


12th_General Tamil_RCM_TM.indd 55 14-08-2021 12:17:16

**ஆசிரியப்பா :**

பா இயற்றுவதற்கான எளிமையான பா ஆசிரியப்பாவாகும். இது அகவலோசை பெற்றதால் அகவற்பா என்றழைப்பர். இதன் சீர் இயற்சீர். இதனை ஆசிரிய 'உரிச்சீர்' என்றும் கூறுவர். காய்ச்சீர் கலந்தும் வரலாம். தளை – ஆசிரியத்தளை .

**பொது இலக்கணம் :**

- அகவலோசை கொண்டது.
- அளவடி பெற்று வரும்.
- இயற்சீர் மிகுந்தும் பிற சீர் கலந்தும் வரும்.
- ஆசிரியத்தளை மிகுந்தும் பிறதளை கலந்தும் வரும்.
- மூன்றடி சிற்றெல்லையாக வரும். பேரெல்லை கவிஞனின் கற்பனைத் திறனைப் பொறுத்தது (எல்லையற்றது).

இதன் வகைகளையும் அறிந்து இவ்விலக்கணப்படி ஆசிரியப்பாவில் செய்யுள் (கவிதை) இயற்ற பழக வேண்டும்.

**செயல்பாடு: 3**

**புதுக்கவிதை :**

மரபுக்கவிதையின் யாப்பு வரையறைகளுக்கு உட்படாது தோன்றிய கவிதை வடிவமே புதுக்கவிதை. இதனாலேயே புதுக்கவிதை எனில் இலக்கணம் இல்லை என்னும் கருத்து எழுந்தது .வைரமுத்து கூட தன் பாடலில்,

"நமது கதை புதுக்கவிதை
இலக்கணங்கள் இதற்கு இல்லை" – என எழுதியிருப்பார்.

தொடக்கக்காலத்தில் "வசனக் கவிதை" எனச் சாதாரணமாகச் சுட்டப்பட்ட நிலையில் பின்பு புதுக்கவிதை எனப் போற்றிக் கொள்ளப்பட்டது. இலக்கணங்களே இல்லை என்பது தான் புதுக்கவிதையின் இலக்கணம் என்னும் நிலை மெல்ல மெல்ல மாறியது. புதுக்கவிதை ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் பரவலாக ஆயிரக்கணக்கில் பலரும் புதுக்கவிதைகளை எழுதினர்.

## மாணவர் செயல்பாடு

- ✍ மரபுக்கவிதை ஒன்றைப் பாடப் புத்தகத்திலிருந்து படித்துக் காட்டவும்.
- ✍ புதுக்கவிதை ஒன்றை மாணவரை எழுதச் சொல்லுதல்.
- ✍ செய்யுள் (கவிதை) இயற்றுவதற்கான அடிப்படைக் கூறுகள் எவை என்பதைக் கூறச் செய்தல்.

## மதிப்பீடு

1. ஆசிரியப்பாவில் மரபுக்கவிதை ஒன்றை எழுதுக.
2. "வானம்"– என்ற தலைப்பில் புதுக்கவிதை எழுதுக.



12th_General Tamil_RCM_TM.indd 56 14-08-2021 12:17:16

# 23 மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் அறிதல்

## கற்றல் விளைவுகள்

- மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளை அறியச் செய்தல்.
- பல்வேறு இடங்களில் வரும் குறியீடுகளை மாணவர்களுக்குத் தெரியப்படுத்துதல்
- மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளைச் செய்யுள் மற்றும் உரைநடையில் பயன்படுத்துவதால் ஏற்படும் பயன்களை மாணவர்களுக்கு உணர வைத்தல்.

## ஆசிரியர் செயல்பாடு

**ஆர்வமூட்டல்**



போன்ற குறியீடுகளைக் கரும்பலகையில் வரைந்து அதை மாணவர்கள் மூலமே "SIGNAL" எனக் கூறவைத்தல். அதைப்போலவே செய்யுளிலும் உரைநடையிலும் சில குறியீடுகள் நமக்குப் பயன்படுகின்றன. அது மெய்ப்புத் திருத்தக் குறியீடு என அழைக்கப்படும். எழுதும்போது ஏற்கனவே ஏற்பட்ட பிழையினைத் திருத்திக் கொண்டு சரி செய்ய மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதனை விளக்கிக் கூறி ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

**செயல்பாடு: 1**

தமிழ்மொழியைக் கற்பதோடு நில்லாமல் தமிழ் சார்ந்து பிறப் பணிகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்நிலையில் நூல்களையும் இதழ்களையும் பிழையின்றி வெளியிட இக்குறியீடுகள் உதவுகின்றன. எனவே, நூல்கள் அல்லது இதழ்களை அச்சிடுவதற்கு முன்னர் அச்சுப்படி திருத்துபவர் அப்பணியின்போது பிழைகளைத் திருத்துவதற்குப் பின்பற்றும் முறைகளையும் திருத்தக் குறியீடுகளையும் அறிந்திருத்தல் வேண்டும்.

**அச்சுப் படி திருத்துவர்களின் பணிகள் :**

- மூலப் படியில் உள்ளபடியே செய்திகள் அச்சாகி உள்ளனவா என ஒவ்வொரு வரியையும் படித்துக் கவனித்தல் வேண்டும்.
- பிழை ஏற்பட்ட சொல்லின் மீது எழுதுதல் கூடாது
- ஒரு வரியின் இடப்பக்கப் பாதியில் பிழை இருந்தால் இடப்பக்கம் ஓரமும் வலப்பக்கப் பாதியில் பிழை இருந்தால் வலப்பக்க ஓரமும் திருத்தம் தருதல் வேண்டும்.
- ஒரு சொல்லில் பிழையிருந்தால் அச்சொல்லையே நீக்கிவிட்டு சரியான சொல்லை தெளிவாகப் பக்க ஓரத்தில் எழுதுதல் வேண்டும்.
- அச்சுப்படி திருத்துவோர் செய்தியின் உருவையோ உள்ளடக்கத்தையோ மாற்றுதல் கூடாது.
- அச்சுப்படியில் இருக்கும் வண்ணத்திற்கு மாறான வண்ணமுடைய மையால் திருத்துதல் வேண்டும். இது பிழைகளைத் தெளிவாகக் கண்டறிய உதவும்.



12th_General Tamil_RCM_TM.indd 57 14-08-2021 12:17:16

**செயல்பாடு: 2**

திருத்தக் குறியீடுகளின் பிரிவுகளை அறிந்து கொள்ளுதல்

**பொதுவானவை:**

Dt – அச்சடித்து இருக்கும் சொல்லையோ எழுத்தையோ நீக்குதல்.

∧ – சொல்லையோ எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக்கொள்க.

**சான்று :**

பாரதி த/மைப் போலவே பிறரையும் நேசிக்கும் பண்பாளர். ம்/

**நிறுத்தக் குறியீடுகள் :**

. / – கால் புள்ளி சேர்த்தல்

; / – அரைப் புள்ளி சேர்த்தல்

. / – முற்றுப்புள்ளி இடவும்

? / – கேள்விக்குறி அடையாளம் இடவும்

! / – வியப்புக்குறி சேர்க்கவும்

**சான்று :**

சங்ககாலத்தில் கற்பித்தல் பணியை மன்றம்/சான்றோர் அவை/அறங்கூர் அவையம் / சமணப்பள்ளி அவையம் போன்ற அமைப்புகள் செய்துள்ளன. ,/,/,/

**செயல்பாடு: 3**

**இடைவெளி தர வேண்டியவை :**

⁀ சொற்களை அல்லது எழுத்துகளைச் சேர்க்கவும் இடைவெளி விட வேண்டாம்.

\# இடைவெளி விடுதல்.

**சான்று :**

தமிழ்/இதழ்களில் தமிழ்/ஆண்டு திங்கள் நாள் ஆகியவற்றை முதன்முதலாகக் குறித்தவர் பாரதியார் /# / # /.

**இணைக்க வேண்டியவை :**

ㄱ இடப்பக்கம் தள்ளவும்

ㄴ வலப்பக்கம் தள்ளவும்

ý ஒற்றை மேற்கோள் குறி இடுதல்

ӳ இரட்டை மேற்கோள் குறி இடுதல்

**சான்று:**

கல்வியின் சிறப்பை / கல்வி அழகே அழகு / என நாலடியார் கூறுகிறது. / ý / ý

## மாணவர் செயல்பாடு

**தனி மாணவர் செயல்பாடு :**

BOLD – தடித்த எழுத்தில் மாற்றுக

UNBOLD – வழக்கமான எழுத்தில் மாற்றுக

Trs – சொற்கள், எழுத்துகளை இடம் மாற்றுக

I.C – எழுத்துருவைச் சிறியதாக ஆக்குக

இவை போன்ற எழுத்து வடிவங்களை ஒவ்வொரு மாணவரிடமும் உதாரணத்துடன் கேட்டல்.

## மதிப்பீடு

1. திருத்தக் குறியீடுகளின் வகைகள் யாவை ?
2. அச்சுப்படி திருத்துபவர் பணிகள் யாவை ?



12th_General Tamil_RCM_TM.indd 58 14-08-2021 12:17:16

# 24 வேற்றுமை

## கற்றல் விளைவுகள்

- வேற்றுமை உருபுகள் எவை என்பதை அறிந்து கொள்ளுதல்.
- வேற்றுமை உருபுகளால் ஏற்படும் பொருள் மாற்றம் பற்றிப் புரிந்து கொள்ளுதல்.
- வாக்கியங்களில் வேற்றுமை உருபுகளை பயன்படுத்தும் விதத்தினை அறிந்து கொள்ளல்.

**ஆர்வமூட்டல்**

'ராமு பள்ளி சென்றான்'

'அரசன் கோயில் கட்டினான்'

ஆகிய சொற்றொடர்களை முறையே கரும்பலகையில் எழுதி மாணவர்களிடம் இதிலமைந்த பிழையை அறியச் செய்தல். கு, ஐ என்ற வேற்றுமை உருபு வராமல் அமைந்ததைச் சுட்டிக் காட்டி ஆர்வமூட்டுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

**செயல்பாடு: 1**

வேற்றுமை எட்டு வகைப்படும். வேற்றுமை உருபுகள் ஐ, ஆல், கு, இன், அது, கண் என ஆறு ஆகும். முதல் வேற்றுமையான எழுவாய் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமையான விளி வேற்றுமைக்கும் உருபு இல்லை.

அமுதன் வந்தான் என்ற தொடரில் அமுதன் என்பது எழுவாய். எழுவாயானது வினைமுற்று, பெயர்ச்சொல், வினாச்சொல் ஆகியவற்றுள் ஒன்றைக் கொண்டு முடியும் பெறும். இது 'எழுவாய் வேற்றுமை' அல்லது 'முதல் வேற்றுமை' என்று அழைக்கப்படும். இதற்கு உருபு இல்லை.

**யானை வந்தது – வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.**

**இனியன் என் தம்பி – பெயர்ப்பயனிலையைக் கொண்டு முடிந்தது**

**அறிவழகி யார் – வினா பெயர்ப் பயனிலைக் கொண்டு முடிந்தது**

இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' செயப்படுபொருள் வேற்றுமை என்றும் வழங்குவர். இஃது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய அறுவகைப் பெயர்களில் வரும்.

| | | |
|---|---|---|
| வளவன் பள்ளியைக் கட்டினான் | – | ஆக்கல் |
| சோழன் பகைவரை அழித்தான் | – | அழித்தல் |
| கயல்விழி கோவிலை அடைந்தாள் | – | அடைதல் |
| குமரன் சினத்தை விடுத்தான் | – | நீத்தல் |
| அகல்யா குயிலைப் போன்றவள் | – | ஒத்தல் |
| கதிர் செல்வத்தை உடையவன் | – | உடைமை |



12th_General Tamil_RCM_TM.indd 59 14-08-2021 12:17:16

### செயல்பாடு: 2

மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகியவை. இது கருவி, கருத்தா, உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்.

| | | |
|---|---|---|
| களிமண்ணால் பானை செய்தான் | – | கருவி |
| கோயில் அரசனால் கட்டப்பட்டது | – | கருத்தா |
| தாயொடு குழந்தை சென்றது | – | உடனிகழ்ச்சி |

நான்காம் வேற்றுமைக்கான உருபு 'கு'. இது கொடை, பகை, நட்பு, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருளில் வரும்.

**சான்று :**

| | | |
|---|---|---|
| அரசன் பொற்கிழி பரிசளித்தான் | – | கொடை |
| நோய்க்குப் பகை மருந்து | – | பகை |
| ஔவைக்கு நண்பன் அதியமான் | – | நட்பு |
| வீட்டுக்கு ஒரு பிள்ளை | – | தகுதி |
| வளையலுக்குப் பொன் | – | அதுவாதல் |
| கூலிக்கு வேலை | – | பொருட்டு |
| யாழினிக்குத் தம்பி எழிலன் | – | முறை |
| திருத்தணிக்கு வடக்கு வேங்கடம் | – | எல்லை |

### செயல்பாடு: 3

ஐந்தாம் வேற்றுமை உருபுகள் இல், இன் ஆகும். இதில் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருள்களில் வரும்.

**சான்று :**

| | | |
|---|---|---|
| தலையின் இழந்த மயிர் | – | நீங்கல் |
| பாலின் நிறம் கொக்கு | – | ஒப்பு |
| சென்னையின் மேற்கு வேலூர் | – | எல்லை |
| அறிவில் மிக்கவர் ஔவை | – | ஏது |

இருந்து, கின்று, விட, காட்டிலும் என்பன ஐந்தாம் வேற்றுமைக்குறிய சொல்லுருபுகள் ஆகும்.

ஆறாம் வேற்றுமை உருபுகள் அது, ஆது, அ என்பன ஆகும். இவ்வுருபுகள் கிழமைப் (உரிமை) பொருளில் வரும்.

**சான்று :**

- எனது வீடு
- எனாது நூல்
- தன பொருள்கள்

ஆறாம் வேற்றுமைக்கு 'உடைய' என்பது சொல்லுருபு ஆகும்.

- என்னுடைய வீடு
- நண்பனுடைய புத்தகம்



12th_General Tamil_RCM_TM.indd 60 14-08-2021 12:17:16

### செயல்பாடு: 4

ஏழாம் வேற்றுமை உருபுகள் கண், கால், மேல், கீழ், இடம், இல் முதலியன ஆகும். இது இடவேற்றுமை என்றும் வழங்கப்படுகிறது.

**சான்று :**

| | | |
|---|---|---|
| மணியில் ஒலி | – | இல் |
| வீட்டின்கண் பூனை | – | கண் |
| அவனுக்கு என் மேல் வெறுப்பு | – | மேல் |
| பெட்டியில் பணம் உள்ளது | – | இல் |

'இல்' என்னும் உருபு ஐந்தாம் வேற்றுமை ஒப்பு, ஏது, நீங்கல் ஆகிய பொருளில் வரும். ஏழாம் வேற்றுமை உருபு இல் இடப்பொருளில் வரும்.

- மாலையில் மலர்கள் – ஏழாம் வேற்றுமை
- மாலையில் இருந்து மலரைப் பிரித்தான் – ஐந்தாம் வேற்றுமை

எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை ஆகும். படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக அழைக்க இவ்வேற்றுமை பயன்படுகிறது.

**சான்று :**

கண்ணா வா !

கிளியே பேசு !

## மாணவர் செயல்பாடு

- ✍ கரும்பலகையில் எண்வகை வேற்றுமை உருபுகளை எழுதச் செய்து அவற்றை மாணவர்கள் அடையாளங்காணச் செய்தல்.
- ✍ சில தொடர்களை எழுதி பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதச் செய்தல்.

## மதிப்பீடு

1. எண்வகை வேற்றமை உருபுகளைக் கூறுக ?
2. இரண்டாம் வேற்றுமை எத்தனை பொருள்களில் வரும் ?
3. ஏழாம் வேற்றுமை உருபு வரும் முறையை விளக்குக.
4. "சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்." – பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதுக.

# 25 எட்டுத்தொகை நூல்கள்

## கற்றல் விளைவுகள்

- சங்க இலக்கியம் என்று அழைக்கப்படும் 'பாட்டும் தொகையும்' பற்றி அறிந்து கொள்ளுதல்.
- பதினெண் மேற்கணக்கு நூல்களின் பட்டியலை நினைவில் நிறுத்தல்.
- எட்டுத்தொகை நூல்களைப்பற்றியும் அவற்றுள் அக, புற நூல்களின் வரிசைகளையும் புரிந்து கொள்ளுதல்.
- சமகால மக்களின் அகம் மற்றும் புறம் சார்ந்த வாழ்க்கை முறைகளை, பண்பாட்டுக் கூறுகளைத் தெரிந்து கொள்ளுதல்.

**ஆர்வமூட்டல்**

'மாணவர்களே ! பேருந்தில் கரம், சிரம் புறம் நீட்டாதீர்கள்' என எழுதியுள்ளதை பார்த்தீர்களா? என்று வினவி அதற்கானப் பொருளை அவர்களிடமிருந்து பெறுதல். புறம் என்பதற்கான பொருளை மாணவர்களிடமிருந்து கேட்டறிந்து ஆர்வமூட்டல்.

## ஆசிரியர் செயல்பாடு

**செயல்பாடு: 1**

சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படும் நூல்கள் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். அவற்றுள் எட்டுத்தொகை தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகை நூல்களாகும்.

"நற்றிணை" என்பது 'நல்ல திணை' என்றும் 'நற்றிணை நானூறு' என்றும் வழங்கப்பெறும். 9 முதல் 12 அடி வரையிலான 400 அகப்பொருள் பாடல்களின் தொகுப்பு. இந்நூலை தொகுத்தாற் பெயர் அறியவில்லை. தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார்.

"நல்ல குறுந்தொகை" என்ற அடைமொழியுடன் 401 அகப்பாடல்களைக் கொண்ட நூல் குறுந்தொகை. 4 முதல் 8 அடி வரையிலான அடி எண்ணிக்கை உடையது. தொகுத்தவர் பூரிக்கோ; தொகுப்பித்தவர் பெயர் அறியப்படவில்லை.

**செயல்பாடு: 2**

3 முதல் 6 அடி வரையிலான குறும்பாடல்களைக் கொண்டது. ஐந்திணைக்கும் முறையே நூறு பாடல்கள் வீதம் எழுதப்பெற்ற நூல் "ஐங்குறுநூறு". பத்து, பத்து பாடல்களாக 500 பாடல்களைக் கொண்டது. இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஆவார்.

சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பாடிய பாடலின் தொகுப்பு பதிற்றுப்பத்து ஆகும். பத்துப்பத்துப் பாடல்களாக, நூறு பாடல்களைக் கொண்டதால் பதிற்றுப்பத்து என்று பெயர் பெற்றது. முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. இந்நூல் பாடாண்திணை என்ற ஒரே திணைப் பாடலினால் ஆனது. ஒவ்வொரு சேர மன்னனையும் ஒவ்வொரு புலவர் பாடியுள்ளார்.


12th_General Tamil_RCM_TM.indd 62 14-08-2021 12:17:16

**செயல்பாடு: 3**

எட்டுத் தொகையில் அகமும் புறமும் கலந்த ஒரே நூல் பரிபாடல். இதிலுள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 70. ஆனால் இன்று 22 பாடல்களே கிடைத்துள்ளன.

'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' என்ற சிறப்பிற்குரியது கலித்தொகை. நல்லந்துவனார் பாடிய கடவுள் வாழ்த்து நீங்கலாக 149 பாடல்கள் உள்ளன. குறிஞ்சி – 29, முல்லை – 17, மருதம் – 35, நெய்தல் – 33, பாலை – 35 பாடல்களை முறையே கொண்டுள்ளது.

**செயல்பாடு: 4**

அகப்பாட்டு, நெடுந்தொகை, பெருந்தொகை நானூறு என்று பல பெயர்களால் அகநானூறு வழங்கப்படுகின்றது. 13 முதல் 31 அடி வரையிலான 400 பாடல்களைக் கொண்டது.

| | | |
|---|---|---|
| களிற்றியானை நிரை | – | 120 |
| மணிமிடைப் பவளம் | – | 180 |
| நித்திலக் கோவை | – | 100 |
| மொத்தம் | | 400 |

என்ற 3 பிரிவுகளாக அமைந்தது அகநானூறு.

| | | |
|---|---|---|
| பாலை | – | 1, 3, 5, 7, 9 ஒற்றைப்படை எண்கொண்ட பாடல்கள் |
| குறிஞ்சி | – | 2, 8 என்ற வரிசை உடைய பாடல்கள் |
| முல்லை | – | 4, 14 என்ற வரிசை உடைய பாடல்கள் |
| மருதம் | – | 6, 16 என்ற வரிசை உடைய பாடல்கள் |
| நெய்தல் | – | 10, 20, 30 என்ற வரிசை உடைய பாடல்கள் |

என்ற வரிசை முறைப்படி அமைந்த பாடல்களை உடையது.

'புறம்' என்றும் 'புறப்பாட்டு' என்றும் புறநானூற்றை அழைப்பர். 4 முதல் 40 அடி வரை அடியளவு கொண்ட நூல். சேர, சோழ, பாண்டிய, வேளிர் மன்னர்களைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. கடையெழு வள்ளல், சங்ககால போர் முறை, வீரம், கொடை, வாழ்க்கை முறை, உயரிய பண்பு ஆகியவற்றை பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாக புறநானூறு விளக்குகின்றது.

## மாணவர் செயல்பாடு

✍ சங்க இலக்கியம் என்று கரும்பலகையில் எழுதி அதன் பகுப்பினை எழுத வைத்தல். மேலும் எட்டுத்தொகை நூல்களின் பட்டியலை எடுத்துக் கூறச் செய்தல்.

## மதிப்பீடு

1. சங்க இலக்கியங்கள் யாவை ?
2. எட்டுத்தொகை நூல்களைப் பட்டியலிடுக.
3. அகநானூற்றின் நூல் அமைப்பைக் கூறுக.
4. புறநானூறு வாயிலாக நாம் அறியும் செய்திகள் யாவை?


12th_General Tamil_RCM_TM.indd 63 14-08-2021 12:17:16

# 26 திருக்குறள்

## கற்றல் விளைவுகள்

- திருக்குறள் நூல் அமைப்பு முறையை அறிந்து கொள்ளுதல்.
- திருக்குறள், திருவள்ளுவரின் பெருமை, சிறப்புகளை நினைவில் நிறுத்துதல்.
- நாடு , இனம், மொழி, காலம் தாண்டிய அறக்கருத்துகளை அனைவரும் ஏற்கும் மாண்பைத் தெரிந்துகொள்ளுதல்.
- உலகின் பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும், பல தமிழ் அறிஞர்களால் உரை எழுதப்பட்ட நூல் என்ற பெரும்பேற்றையும் விளக்கி உணர்தல்.

### ஆர்வமூட்டல்

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி "

என்ற முதுமொழியில் அமைந்த இரண்டு என்பது எதைக் குறிக்கும்? என்று மாணவர்களிடம் வினாத்தொடுத்து "திருக்குறள்" என்ற விடையை வரவழைத்தல். திரு என்ற சொல்லும், குறள் என்ற சொல்லும் இணைந்ததே "திருக்குறள்" என்று நினைவூட்டுதல்.

## ஆசிரியர் செயல்பாடு

### செயல்பாடு: 1

திருக்குறள், "பதினெண் கீழ்க்கணக்கு" நூல்களில் ஒன்று. குறள் வெண்பாக்களால் ஆனதால் "குறள்" எனவும், மேன்மையை உணர்த்த "திரு" எனவும் அடைமொழியுடன் 'திருக்குறள்' என்று அழைக்கப்படுகின்றது.

மக்களின் வாழ்க்கை நெறிகளை நிலைநிறுத்தும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகளால் திருக்குறள் சிறப்புப் பெற்றிருக்கிறது.

முப்பால் என்றும் வழங்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| அறத்துப்பால் | – | 38 அதிகாரங்கள் |
| பொருட்பால் | – | 70 அதிகாரங்கள் |
| காமத்துப்பால் | – | 25 அதிகாரங்கள் |
| மொத்தம் | – | 133 அதிகாரங்கள் |

9 இயல்களை உடையது. அதிகாரத்திற்கு பத்து குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் அமைந்துள்ளன.

### செயல்பாடு 2

1. உத்தரவேதம், 2. தெய்வநூல், 3. பொய்யாமொழி, 4. வாயுறை வாழ்த்து, 5. தமிழ்மறை, 6.பொதுமறை, 7.திருவள்ளுவம்



12th_General Tamil_RCM_TM.indd 64 14-08-2021 12:17:16

என்ற பல பெயர்களால் திருக்குறள் அழைக்கப்படுகின்றது. "தமிழுக்குக் கதி" என்று கம்பனையும் வள்ளுவனையும் குறிப்பிடுவர்.

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

– என்று ஔவையார் புகழ்கிறார்,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று பாரதி சிறப்பிக்கிறார்

"வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ்வையகமே"
"இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே"

– என்று பாரதிதாசனும் திருக்குறளின் பெருமையைப் பாராட்டி மொழிந்தார். திருக்குறளின் பெருமையை 'திருவள்ளுவமாலை' என்ற நூல் போற்றுகிறது.

**செயல்பாடு: 3**

திருவள்ளுவருக்குப் பல்வேறு சிறப்புப்பெயர்கள் உண்டு.

நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகனார், மாதானுபங்கி, பெருநாவலர், செந்நாப் போதார்.

திருவள்ளுவரது காலம் கி.மு 31 ஆக உறுதிசெய்யப்பட்டுத் தைத்திங்கள் இரண்டாம்நாள் திருவள்ளுவர் நாளாகத் தமிழக அரசு கொண்டாடி வருகின்றது. வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைத்தும் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் முழு உருவச்சிலை அமைத்துத் தமிழக அரசு சிறப்புச் செய்துள்ளது.

## மாணவர் செயல்பாடு

- ✍ கரும்பலகையில் சில சொற்களை எழுதி அச்சொல்லில் தொடங்கும் குறளையும், மேலும் சில சொற்களை எழுதி அச்சொல்லில் முடியும் குறளையும் மாணவர்களைக் கூறச் செய்தல்.

## மதிப்பீடு

1. திருக்குறளுக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை?
2. திருவள்ளுவருக்கு அமைந்த சிறப்புப்பெயர்களைக் கூறுக.
3. திருவள்ளுவருக்கு அரசுசெய்த சிறப்பைக் கூறுக.



12th_General Tamil_RCM_TM.indd 65 14-08-2021 12:17:16

# 27 காப்பியங்கள்

## கற்றல் விளைவுகள்

- காப்பியங்கள் என்றால் என்ன என்பதை அறியச் செய்தல்.
- காப்பியங்களுக்கான வரையறை எவை என்பதை உணர்தல்.
- ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்களை அறிதல்.

### ஆர்வமூட்டல்

மாணவர்களே உங்களுக்குக் கம்பராமாயணம் கதை தெரியுமா? எனக்கேட்டு அவர்களிடமிருந்து பதிலைப் பெற்று ஆர்வமூட்டல்.

## ஆசிரியர் செயல்பாடு

### செயல்பாடு: 1

காப்பியம் என்பது செய்யுள் நடையில் அமைந்த கதை பகுதியைக் குறிக்கிறது. அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு பண்பும் அமைந்ததே பெருங்காப்பியம் என்று தண்டியலங்காரம் இலக்கணம் வகுக்கிறது.

தமிழில் ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள் என்று வகைப்படுத்துவர். ஐம்பெருங்காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகும்.

அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு பண்புகளில் ஏதேனும் ஒன்று குறைந்தால் அது சிறு காப்பியம் என்று அழைக்கப்படும். ஐஞ்சிறுங்காப்பியங்கள் என்று அழைக்கப்படுபவை நீலகேசி, சூளாமணி, உதயணகுமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம் என்பனவாகும்.

### செயல்பாடு: 2

சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள் ஆவார். சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உள்ளடக்கியது.

- அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்.
- உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.
- ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

என்ற மூன்று உண்மைகளை எடுத்தியம்புகிறது. மேலும் ஒற்றுமைக் காப்பியம், நாடகக் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்று பல வகைகளில் போற்றப்படுகிறது.

மணிமேகலை முப்பது காதைகளை உடைய காப்பியமாகும். சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் "இரட்டைக் காப்பியங்கள்" என்று அழைப்பர். சிலப்பதிகாரத்தின் நீட்சியாக மணிமேகலை அறியப்படுகிறது. இந்நூலை மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் படைத்தார்.



12th_General Tamil_RCM_TM.indd 66 14-08-2021 12:17:16

சீவகசிந்தாமணி திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது. விருத்தப்பாவால் ஆன முதல் நூல். இந்நூல் 13 இலம்பகங்களைக் கொண்டுள்ளது. சீவகன் எட்டுப் பெண்களை மணந்து கொண்டதால் இந்நூலை மணநூல் என்றும் அழைப்பர்.

வளையாபதி சமண காப்பியமாக அறியப்படுகிறது. 70 செய்யுள்கள் மட்டுமே கிடைக்கப் பெறுகின்றன. நூல் ஆசிரியர் பற்றிய குறிப்பு இல்லை.

குண்டலகேசி பௌத்த சமயக் காப்பியம் ஆக 19 பாடல்கள் மட்டுமே உள்ளன. இந்நூலுக்கு எதிர்ப்பாகத் தோன்றிய நூல் நீலகேசி.

**செயல்பாடு: 3**

கம்பராமாயணம் வடமொழியில் வால்மீகி பாடிய இராமாயணத்தைத் தழுவி தமிழில் கம்பர் இயற்றினார். 'இராமாவதாரம்' என்றே கம்பர் இதற்குப் பெயர் சூட்டியுள்ளார். கம்பரால் இயற்றப்பட்டதால் கம்பராமாயணம் என்று அழைக்கப்படுகிறது. ஆறு காண்டங்களை உடையது.

கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு என்று பாரதி போற்றுகிறார். "கல்வியில் பெரியவர் கம்பர்" என்றும், "விருத்தம் எனும் ஒண்பாவில் உயர் கம்பன்" என்றும், "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் "என்றெல்லாம் பலவாறு கம்பர் சிறப்பிக்கப்படுகிறார். கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல் ஆவார்.

**செயல்பாடு: 4**

இரட்சணிய யாத்திரிகம் ஆங்கிலத்தில் ஜான் பனியன் எழுதிய 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்ற நூலைத் தழுவி தமிழில் எழுதப்பட்டது. இதன் ஆசிரியர் எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை. இந்நூல் இயேசு பெருமானின் வாழ்க்கை வரலாற்றை விளக்கி உணர்த்துகிறது.

சீறாப்புராணம் உமறுப்புலவரால் இயற்றப்பட்டது. இந்நூல் முகமது நபியின் வாழ்க்கையை எடுத்துரைப்பதாகும். மூன்று காண்டங்களை உடையது.

## மாணவர் செயல்பாடு

- காப்பியங்கள் பெயர்களைக் கேட்டுக் கரும்பலகையில் எழுத செய்தல்.
- ஐம்பெருங்காப்பியங்களை வரிசையாகக் கூற செய்தல்.

## மதிப்பீடு

1. காப்பியம் என்றால் என்ன?
2. ஐம்பெருங்காப்பியங்களைக் குறிப்பிடுக.



12th_General Tamil_RCM_TM.indd 67 14-08-2021 12:17:17

# 28 சிறுகதை

## கற்றல் விளைவுகள்

- சிறுகதை உருவான முறை பற்றி அறிந்து கொள்ளுதல்.
- சிறுகதைக்கான அடிப்படைப் பண்புகளைத் தெரிந்து கொள்ளுதல்
- காலமாற்றத்திற்கேற்ப கதைக்களம் அமைக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துதல்
- "சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்" என்ற அடிப்படையில் நடை அமைப்பை வகுத்துக் கொள்வதைப் புரிந்துகொள்ளல்.

### ஆர்வமூட்டல்

மாணவர்களே! நீங்கள் ஒரு கதை கூறுங்கள் என்று கேள்வி எழுப்பி அவரவர் கூறும் கதைகளைக் கேட்டு பாராட்டுதல். 'கதை' என்றதுமே மாணவ–மாணவிகளிடம் தோன்றும் புத்துணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் உணர்ந்து அதற்கான காரணிகளைத் தெரிவித்தல்.

## ஆசிரியர் செயல்பாடு

### செயல்பாடு: 1

நம்முடைய வாழ்க்கையில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகள், விருப்பங்கள், வெற்றி, தோல்வி, எதிர்ப்பு, ஆறுதல், ஏமாற்றம், சவால் போன்ற பல்வேறு சூழல்களைக் கதைக்களமாக மாற்றி குதிரைப் பந்தயம் போன்று விறுவிறுப்பான நடையில் அமைத்து எழுதுவது சிறுகதை. அமர்ந்து ஒரே மூச்சில் அரைமணி நேரத்தில் படிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். ஒரே ஒரு கருத்து நிலைநாட்டப்பட வேண்டும்.

"புதினம் புளிய மரமென்றால், சிறுகதை தென்னைமரம்" என்பர், இராஜாஜி.

### செயல்பாடு: 2

உலகின் முதல் சிறுகதை அமெரிக்காவில் தோன்றியது. உலகின் முதல் சிறுகதைத் தொகுப்பு 1819 இல் வெளியிடப்பட்ட 'தி ஸ்கெட்ச் புக்' (The Sketch book) என்பதாகும். சிறுகதை உலகின் தந்தை என்று செகாவ் என்பவர் போற்றப்படுகிறார். இந்தியாவில் ரவீந்திரநாத்தாகூரும் பக்கிம் சந்திரரும் சிறுகதைகளை உருவாக்கிப் பேணி வளர்த்தனர்.

### செயல்பாடு: 3

வீரமாமுனிவரின் பரமார்த்த குரு கதை தாண்டவராய முதலியரின் பஞ்சதந்திர கதைகள், செல்வகேசவராய முதலியாரின் அபிணவக் கதைகள் போன்றவை தமிழில் சிறுகதை உருவாக அடித்தளம் அமைத்துக் கொடுத்தவை. வ.வே.சு. ஐயர் எழுதிய "மங்கையர்கரசியின் காதல்" என்ற தொகுப்பே முதல் சிறுகதை நூலாகும். அதில் இடம் பெற்றுள்ள "குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை" என்பதே தமிழின் முதல் கதையாகும். வ.வே.சு. ஐயரை "தமிழ் சிறுகதையின் தந்தை" எனப் பாராட்டுவர். 'தமிழ்ச் சிறுகதை மன்னன்', 'தமிழ்நாட்டின் மாப்பாசான்' என்று போற்றப்படுபவர் புதுமைபித்தன்.



12th_General Tamil_RCM_TM.indd 68 14-08-2021 12:17:17

**செயல்பாடு: 4**

- ✍ இலட்சியவாதக் கதைகள், பொழுதுபோக்குக் கதைகள்.
- ✍ சமூக விமர்சனக் கதைகள், பெண்ணுலக சித்தரிப்புக் கதைகள்.
- ✍ மனித உறவுகள், மனச்சலனங்கள், வட்டார மொழி, வறுமை, பெருநகர வாழ்க்கை சம்பந்தப்பட்ட கதைகள்.
- ✍ வாழ்வின் நுட்பமான தருணங்கள், புனைவு நடை, முற்போக்கு கருத்துகள் அடங்கிய கதைகள்.
- ✍ ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வு, இலக்கிய வாசிப்பை பொது மக்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் எழுதப்படும் கதைகள்.

இதுபோன்று காலத்திற்கேற்ப கதைக்களங்கள் அமைந்து வருகின்றன.

## மாணவர் செயல்பாடு

- ✍ சிறுகதை பற்றிய அடிப்படைச் செய்திகளை வினாவாக்கி அவற்றிற்கு விடை எழுதக் கூறுதல்.
- ✍ புகழ்பெற்ற எழுத்தாளர்களைக் கூறி அவரது படைப்புகளைக் கூறச் செய்தல்.

## மதிப்பீடு

1. உலகச் சிறுகதையின் தந்தை யார்?
2. தமிழ்நாட்டின் மாப்பாசான் என்று போற்றப்படுபவர் யார்?
3. ஏதேனும் ஒரு கதைக் களத்தைத் தேர்ந்தெடுத்து சிறுகதை எழுதுக.



12th_General Tamil_RCM_TM.indd 69 14-08-2021 12:17:17

# 29 கட்டுரைக்கான நெறிமுறைகள்

## கற்றல் விளைவுகள்

- கட்டுரையின் விளக்கத்தை அறியச் செய்தல்.
- கட்டுரையின் வகைகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- கட்டுரையின் அனைத்துத் தன்மைகளையும் உணர்ந்து எழுதச் செய்தல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

'கட்டு' என்றால் பொருள் என்ன ? எவற்றையெல்லாம் கட்டு என அழைப்பர். ஏன் அவ்வாறு அழைக்கிறார்கள் எனக் காரணம் கேட்டறிதல். உதாரணமாக நெற்கட்டு, கீரைக்கட்டு என்றெல்லாம் கூற வாய்ப்புகள் உண்டு, ஒரே மாதிரியான பொருளை நிறைய சேர்த்துக் கட்டினால் அதனைக் கட்டு என அழைப்பர். அதுபோல நிறைய செய்திகளை உள்ளடக்கி உரைத்தலால் 'கட்டுரை' என்பதை விளக்கிக் கூறி மாணவர்களை ஆர்வமூட்டல்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

### கட்டுரை விளக்கம் :

- ஒரு பொருளைப்பற்றி இலக்கண முறையில் கட்டுரைப்பது கட்டுரை.
- உள்ளத்தில் தோன்றுவதைக் கட்டுரைப்பது கட்டுரை.
- அழகு நிரம்பிய உரையே கட்டுரை.
- கட்டுரையாவது வகைப்படுத்திக் கூறுதல்.

இவ்வாறு அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர். குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றி ஒரு கட்டுக்கோப்புடன் யாவரையும் ஈர்க்கும் முறையில் அமைக்கப்படுவதைக் கட்டுரை எனலாம்.

### செயல்பாடு: 2

### கட்டுரை அமைப்பு :

எந்தப் பொருளைப் பற்றி கட்டுரை எழுதினாலும் அது முன்னுரை – பொருளுரை – முடிவுரை ஆகியவற்றைக் கொண்டு விளங்க வேண்டும். முன்னுரையும் முடிவுரையும் ஒவ்வொரு பத்திக்குள் அமைய வேண்டும்.

முன்னுரையானது எழுதப் போகும் கருத்தை வகுத்துக் காட்டுவதற்காக இருக்க வேண்டும். முடிவுரையானது சொல்லப்பட்ட கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவதாக அமைய வேண்டும். ஒரு கட்டுரையில் முன்னுரையையும் முடிவுரையையும் படித்தாலே கட்டுரையின் சிறப்புத் தன்மை விளங்கும்.



12th_General Tamil_RCM_TM.indd 70 14-08-2021 12:17:17

பொருளுரையானது எடுத்துக் கொண்ட கருத்தைப் பல வழிகளில் விளக்கிக் கூறும் பகுதி ஆகும். ஆதலின் அதை பல பத்திகளாகப் பிரித்து எழுதுதல் வேண்டும். எடுத்துக்கொள்ளும் பொருளுக்கு ஏற்ப, உள்தலைப்புகள் பலவற்றைக் கொண்டதாகப் பொருளுரை விளக்க வேண்டும். பொருளுரையில் மேற்கோள் அமைத்து எழுதுவது இன்னும் சிறப்பு.

கட்டுரையானது சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நன்மொழி புணர்த்தல் முதலான அழகுகளைப் பெற்றிருக்க வேண்டும். கூறியது கூறல், மாறுகொளக் கூறல், மற்றொன்று விரித்தல் முதலான குற்றங்கள் இல்லாமல் எழுதப்பட வேண்டும்.

### செயல்பாடு: 3

### கட்டுரையின் பொதுவிதிகள்:

- செய்திகளைத் திரட்டுதல்
- முறைப்படுத்துதல்
- தலைப்புக் கொடுத்தலும் பத்தி அமைத்தலும்.
- மேற்கோள்கள், பழமொழிகள் திரட்டுதல்
- பல்வகை வாக்கியங்களில் எழுதுதல்
- நடையழகு
- நிறுத்தக் குறியீடுகள் பயன்படுத்தி எழுதுதல்
- நல்ல கருத்துகளை எடுத்தாளும் திறன்
- மீள்பார்வை செய்தல்.
- நல்ல கையெழுத்தில் எழுதுதல்

கட்டுரை எழுதும் போது இவ்விதிகளை நினைவிற்கொள்ளுதல் வேண்டும்.

### செயல்பாடு: 4

### கட்டுரையின் வகைகள் :

- கதை இயல்புக் கட்டுரை
- விளக்கக் கட்டுரை
- சிந்தனைக் கட்டுரை
- வருணனைக் கட்டுரை
- கற்பனைக் கட்டுரை
- ஆய்வுக் கட்டுரை
- வரலாற்றுக் கட்டுரை
- தருக்கக் கட்டுரை
- பாராட்டுக் கட்டுரை
- பத்திரிகைக் கட்டுரை

என்பனவாகப் பகுத்துக்காட்டுவர். எவ்வகையான கட்டுரைகள் எழுதினாலும் அதற்குரிய அமைப்பையும் விதிகளையும் பயன்படுத்தி எழுதுதல் வேண்டும்.



12th_General Tamil_RCM_TM.indd 71 14-08-2021 12:17:17

## மாணவர் செயல்பாடு

- ✍ மாணவர்களுக்குத் தனித்தனியாகத் தலைப்புகள் கொடுத்துக் கட்டுரை எழுதச் செய்தல்.

**சான்றாக:**

- ✍ கடற்காட்சியை வருணித்துக் கட்டுரை.
- ✍ 'நீ திருவள்ளுவரைச் சந்தித்தால்' என்ற தலைப்பைக் கொடுத்து கற்பனைக் கட்டுரை.
- ✍ அணுவாற்றல் ஆக்கத்திற்கா? அழிவிற்கா? போன்ற தருக்கக் கட்டுரை.

## மதிப்பீடு

1. கட்டுரை வரையறு?
2. கட்டுரையின் வகைகளைக் கூறுக?
3. கட்டுரையின் பொதுவிதிகள் சிலவற்றைக் கூறுக ?
4. முடிவுரை எவ்வாறு இருத்தல் வேண்டும் ?



12th_General Tamil_RCM_TM.indd 72 14-08-2021 12:17:17

# 30 நேர்காணல் உத்திகள்

## கற்றல் விளைவுகள்

- நேர்காணலின் விளக்கத்தை அறியச் செய்தல்.
- நேர்காணலின் நோக்கங்களை புரியச் செய்தல்.
- நேர்காணலின் வகைகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- நேர்காணலால் ஏற்படும் பயன்களை உணரச் செய்தல்.
- நேர்காணலின்போது செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை எவையென உணர்ந்து நேர்காணல் எடுக்கச் செய்தல்.

## ஆசிரியர் செயல்பாடு

### ஆர்வமூட்டல்

விளையாட்டில் சாதனை புரிந்த ஒருவரிடம் நேர்காணல் செய்யும்போது இந்த விளையாட்டில் நீங்கள் சிறந்து விளங்குவதற்கான காரணத்தைக் குறிப்பிட முடியுமா? இவ்விளையாட்டில் நீங்கள் எவ்வளவு நேரம் தினமும் பயிற்சி செய்வீர்கள்? நீங்கள் இந்த விளையாட்டை தேர்ந்தெடுத்தற்கான காரணம் ஏதேனும் உள்ளதா? விளையாட்டில் ஈடுபடும் இன்றைய இளைஞர்களுக்கு நீங்கள் சொல்லும் வழிகாட்டுதல் இது போன்ற வினாக்கள் வாயிலாக மாணவர்களை ஆர்வமாக பங்கேற்கச் செய்தால் "நேர்காணல்" என்னும் பாடத்தலைப்பினுள் நுழைய இயலும்.

## கற்பித்தல் செயல்பாடுகள்

### செயல்பாடு: 1

### நேர்காணல் விளக்கம்:

நேர்காணல் என்பது கேள்விகள் கேட்டுப் பதில்களைப் பெறும் ஓர் உரையாடல் நிகழ்ச்சி ஆகும். செய்திக்கு மூலமாக இருப்பவரை அல்லது தானே செய்தியாகும் ஒருவரை நேர்காணல் செய்து கருத்துகளைத் திரட்டுதல் இதன் முக்கியமான நோக்கமாகும். நேர்காணல் இல்லாமல் செய்திகள் இல்லை என்னும் அளவிற்குச் செய்திகளில் நேர்காணல் முக்கியத்துவம் பெறுகின்றது.

நேர்காணல் என்பது ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்த வல்லுனரோடு தொடர்பு கொண்டு, அவர் மூலமாக விவரங்களைக் கேட்டுப் பெறுவதாகும். இது நேரிலோ, கடிதம் வாயிலாகவோ, தொலைபேசி வாயிலாகவோ அல்லது நவீன தகவல் தொடர்பு சாதனம் வழியாகவோ நிகழலாம்.

## செயல்பாடு: 2

### நேர்காணலின் நோக்கம்:

நேர்காணல் ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு நோக்கத்துடன் நடத்தப்பெறும். நோக்கமற்ற நேர்காணல் பொழுதுபோக்குப் பேச்சு போல் ஆகிவிடும். நேர்காணல் செய்பவர் நேர்காணலின் நோக்கம் குறித்துத் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும்.

நடப்பு அறிதல் – நடந்து கொண்டிருக்கும் சில சுவையான நிகழ்வுகள் குறித்த விவரம், கருத்தறிய அதனுடன் தொடர்புடையவரிடம் நேர்காணல் செய்தல்.

நிகழ்வு விவரம் அறிதல் – நடைபெறப்போகும் முக்கிய நிகழ்வு குறித்த விவரம், கருத்தறிய அதனுடன் தொடர்புடையவரிடம் நேர்காணல் செய்தல்.

கருத்து வெளிப்படுதல் – தலைவர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள் போன்றவர்களின் ஆளுமைத்திறன், தனித்தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்த நேர்காணல் செய்தல்.

## செயல்பாடு: 3

### நேர்காணல் வகைகள்:

நேர்காணல் எப்படி வேண்டுமானாலும் அமையலாம். இருப்பினும் பொதுவாக கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் நேர்காணல் வகைப்படுத்தப்படுகிறது.

- தற்செயல் நேர்காணல் :
- ஆளுமை விளக்க நேர்காணல்
- செய்தி நேர்காணல்
- செய்திக்கூட்ட நேர்காணல்
- செய்திச் சுருக்க நேர்காணல்
- சிற்றுண்டிக் கூட்ட நேர்காணல்
- தொலைபேசி நேர்காணல்
- அடைகாத்தல் நேர்காணல்
- பட்டம் பறக்கவிடும் நேர்காணல்
- மின்னஞ்சல் நேர்காணல்
- நிகழ்பட உரையாடல் நேர்காணல்

## செயல்பாடு: 4

### நேர்காணலின் பயன்கள்:

நேர்காணலால் பல நன்மைகள் கிடைக்கின்றன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

- நேர்காணல் செய்திகளை உருவாக்குவதற்குப் பயன்படுகிறது.


12th_General Tamil_RCM_TM.indd 74 14-08-2021 12:17:17

- ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி, பொதுமக்களிடம் கருத்தை உருவாக்குவதற்கு நேர்காணல் பயன்படுகிறது.
- அரசு வெளியிடும் செயல் திட்டங்களின் விளக்கங்களை அதிகாரப் பூர்வமாக அறிய நேர்காணல் துணை செய்கிறது.
- நாட்டிற்குப் பயன்படும் கண்டுபிடிப்புகள், திட்டங்கள் பற்றி விளக்கமாக அறிய நேர்காணல் பயன்படுகிறது.
- நேர்காணப்படுபவரின் சொற்களையும் செய்கைகளையும் ஒளிப்படங்களுடன் வெளியிடும் போது சுவையான கட்டுரை கிடைக்க, அது வாய்ப்பு அளிக்கிறது.

**செயல்பாடு: 5**

### நேர்காணலின்போது செய்ய வேண்டியவை:

- நேர்காணலுக்குத் திட்டமிடுதல், இணங்க வைத்தல், தெளிவாக அறிதல், தொடர் முயற்சி எனும் நான்கு முக்கிய பங்குகள் இருக்க வேண்டும்.
- யாரை நேர்காணல் செய்கிறோமோ அவரைப் பற்றிய தகவல்களை அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

### நேர்காணலின்போது செய்யக் கூடாதவை:

- முன் தயாரிப்பு இல்லாமல் நேர்காணல் செய்யக்கூடாது.
- நேர்காணலின்போது பதிலளிப்பவர் சொல்லும் கருத்துக்கு இடைமறித்து கேள்வி கேட்கக்கூடாது. அது அவர்களின் சிந்தனை ஓட்டத்தைத் தடுக்கும்.

## மாணவர் செயல்பாடு

✍ மாணவர்கள் தங்களுக்குள் இந்த உத்திகளைக் கடைப்பிடித்து நேர்காணலைச் செய்யச் சொல்லுதல். அதில் குடும்ப விவரங்கள், பள்ளி அனுபவம், எதிர்கால இலட்சியம் போன்றவைகளைப் பேசச் செய்தல்.

## மதிப்பீடு

1. நேர்காணல் – வரையறு.
2. நேர்காணல் வகைகள் இரண்டினைக் கூறுக.
3. நேர்காணலின் பயன்கள் இரண்டினைக் கூறுக.



12th_General Tamil_RCM_TM.indd 75 14-08-2021 12:17:17

குறிப்பு



12th_General Tamil_RCM_TM.indd 76 14-08-2021 12:17:17